Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்

INTERNET

மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு

'திருமுருகன் கொம் நெற்'

இல. 46, ஆடியபாதம் வீதி,
(ப. நோ. கூ. ச. முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310

(ச-1771)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 16 (11.11.2003) செவ்வாய்க்கிழமை இதழ் :42

## மூன்று அமைச்சுக்களைப் பறித்தமையானது ஜனாதிபதியின் துணிச்சலான நடவடிக்கையே

### 'தினமின'வில் ஆனந்தசங்கரி பாராட்டு



(கொழும்பு)


நாடு பயங்கரமான சூழ்நிலைக்குள் சென்றதால்தான், ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தினார். அவர் அமைச்சுப் பொறுப்புக்களைக் கைப்பற்றியமை ஒரு துணிச்சலான நடவடிக்கையே என்று, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

தினமின சிங்கள பத்திரிகைக்கு தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து அவர் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட ஜெனரல் (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியார்



அம்மாவுக்கு இன்னொரு எடுப்பிடி வாய்ச்சிருகிறார் பாருங்கோ...

# தேர்தலை எதிர்கொள்ளத் தயார்!

# ஐ.தே.மு. அரசாங்கம் அறிவிப்பு!!



பிரதமர் ரணில் தலைமையில் நேற்று நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட படம்.

## நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு

(கொழும்பு)

**தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய தேர்தலை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.**

**நேற்று நடந்த விசேட அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.**

நேற்றுக்காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு முடிவுகாண - நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகுமாறு அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களிடம் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் "நாங்கள் மக்கள்முன் செல்வதில் எதுவித பிரச்சினையையும் எதிர்கொள்ளவில்லை. அவர்கள் எம்மை நிராகரிப்பார்கள் என்று நாம் சந்தேகம் கொள்ளவும் இல்லை. ஆகையால் - தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதை நாங்கள் வரவேற்கின்றோம்" என்று குறிப்பிட்டார்.

## தற்போதைய அரசியல் நெருக்கடியால்

## நாட்டு நிலைமை குறித்து ஆராய

# தற்போதைய அரசியல் நெருக்கடியால் சமாதானப் பேச்சு தாமதமடையலாம்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில், இந்தமாத இறுதியில் ஆரம்பிக்கப்படவிருந்த சமாதான பேச்சுவார்த்தை, தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியினால் மேலும் தாமதமடையலாம் என, அரசியலமைப்பு விவகார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்

நேற்று ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களுடனான கலந்துரையாடலின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சமாதானம், நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தி என பன பெரிய சவால்களைச் சந்தித்து நிற்கின்றது. 2002 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அர

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டு நிலைமை குறித்து ஆராய பிரதமருக்கு ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து ஆராய்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பிற்கான அழைப்புக் கடிதத்தினை நேற்று ஜனாதிபதி செயலகம் பிரதமருக்கு அனுப்பியுள்ளது.

தேசிய நல்லிணக்க அரசாங்கம் ஒன்றினை உருவாக்கும் நோக்குடன், சகல தேசாபிமான சக்திகளையும் இணைத்து பாரிய கூட்டணி ஒன்றினை அமைப்பதற்கான முன்னோடி ஏற்பாடாகவே இந்தச் சந்திப்புக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க ஜனாதிபதி தயாராகவே உள்ளார்!

## எதிர்க்கட்சித் தலைவர் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை ஏற்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாராக இருக்கின்றார் என எதிர்க் கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற, பொதுஜன ஐக்கிய முன்னணியின் தொழிற்சங்கத் தலைவர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொண்டு உரை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு, உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவின் தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே, இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஐ.தே.கட்சி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, புளொட், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்திலேயே, நாடாளுமன்றத்தை கூட்டுமாறு கோரும் எழுத்துமூலமான கோரிக்கை ஜனாதிபதிக்கு விடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட கட்சித்தலைவர்கள் - நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அதிகாரம் சபாநாயகருக்கு இருப்பதாகத் தெரிவித்தனர்.

ஆனால், அரசியலமைப்பு ரீதியாக நாடாளுமன்றத்தைக் கூட்டும் அதிகாரம் தனக்கில்லையென்றும், ஜனாதிபதி நாடாளுமன்றத்தை இடை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்புத்துறை வான் விபத்தில் சட்டத்தரணி ஜெயசிங்கம் மரணம்!

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஹயஸ் வான் விபத்தொன்றில் சட்டத்தரணி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று, கொழும்புத்துறை பாண்டியன்தாழ்வு சந்தனமாதா கோவிலுக்கு அண்மையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் கடமையாற்றும் சட்டத்தரணி ராமநாதன் ஜெயசிங்கம் (வயது 63)

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் நெருக்கடிகள் முடிவுக்கு வரவேண்டும்!

## அமெரிக்கத் தூதரகம் அறிக்கை

இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடிகளை விரைவாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

இவ்வாறு, இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு ஒரு மாத காலத்துக்குள் தீர்வு கிடைக்கும்!

## அதன் தலைவர் உபாலி விஜயசேகர தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் கோரிக்கைக்கு சரியான தீர்வு ஒரு மாதத்திற்குள் கிடைக்கும் என, இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் உபாலி விஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆடி மாதம் 22 ஆம் திகதி - யாழ்.காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவில் தமக்குரிய அடிப்படைச் சம்பள அதிகரிப்பு மற்றும் கொடுப்பனவுகளை அரசாங்கம் வழங்கவில்லை எனக்கூறி முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து இது தொடர்பான விளக்கத்தினை வழங்குமாறு கோரி, யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் சீமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர்.

இதற்குப் பதிலளித்துக் கடிதம் அனுப்பியபோதே உபாலி விஜயசேகர, இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு ஒரு மாதகாலத்திற்குள் நல்ல முடிவை அனுப்புவதாகத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கடிதம் கடந்த 5 ஆம் திகதி யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்றதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

அவரது பதிலைத் தொடர்ந்தே அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும் எனவும், அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# உரும்பிராய் பாடசாலையில் நடமாடும் அஞ்சல் சேவை

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில், நேற்று நடமாடும் அஞ்சல் சேவை ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பிராந்திய நிர்வாக அதிகாரி ச.சிவராஜசிங்கம், பதவி நிலை உத்தியோகத்தர் ஆ.சுந்தரலிங்கம் மற்றும் ஐந்து தபால் திணைக்கள ஊழியர்களுமே இந்தச் சேவையை நடத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 10 மணிக்கு இடம்பெற்ற இந்த நிகழ்வில் - 126 பாடசாலை மாணவர்கள் அஞ்சல் அறிமுக அட்டையைப் பெற்றுள்ளார்கள்.

இந்தச் சேவை, தொடர்ந்தும் க.பொ.த சாதாரண தரத்தில் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி, பாடசாலைகள் மட்டத்தில் நிகழ்த்தப்படவுள்ளதாக, அஞ்சலக நிர்வாக அதிகாரி ச.சிவராஜசிங்கம் தெரிவித்தார். (ப)

# கலைப் பேரரசு நினைவாக ஞாபகார்த்த நிதியம் அமைப்பு

கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை ஞாபகார்த்த நிதியம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரையின் ஞாபகார்த்த ஒன்றுகூடல், அண்மையில் நடைபெற்றது. இதன் போது, கலைப் பேரரசின் நண்பர்கள் இவரது நினைவாக நிதியமொன்றை ஆரம்பிக்கவேண்டுமென விடுத்த கோரிக்கையையடுத்து, இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியம் ஒவ்வொரு வருடமும் மேடையேறிய சிறந்த ஒரு நாடகம் அல்லது நாடக நூல், சிறந்த நடிகர் ஆகியவற்றில் ஒன்றைத் தெரிவுசெய்து, அதற்கு விருது வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஐந்துபேர் கொண்ட செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

## கிணற்றில் தவறிவீழ்ந்து குடும்பப் பெண் மரணம்

கிணற்றில் தவறிவீழ்ந்து குடும்பப் பெண்ணொருவர் மரணமாகியுள்ளார். இளவாலை சென்.ஜேம்ஸ் லேனில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், தேவதாஸன் பாத்திமா (வயது 45) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த நிலையில் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட இவரது சடலம் - மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ச)


## மத்திய கல்லூரியில் மாணவர் தலைவர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் மாணவர் தலைவர் தினம் - இன்று, கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் மாணவ தலைவர் வே.செந்தூர்குமரன் தலைமையில், இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் வி.கே.சண்முகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.






வடக்கு - கிழக்கு ஊடகவியலாளர் சங்கத்தின் அறிமுகமும், புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த சனிக்கிழமை கொழும்பு ரேணுகா ஹோட்டலில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் - நிகழ்வுக்கு அனுசரணை வழங்கிய தேசிய சமாதானப் பேரவையின் ஆளுநர் சபை உறுப்பினர் நிமலன் கார்த்திகேயன், ஊடக இணைப்பாளர் ஜெகான் பெரேரா ஆகியோரும் இணைத்தலைவர்களான சி.கதிர்காமத்தம்பி, ஸ்ரான்லி சமரசிங்க ஆகியோரை முதலாவது படத்திலும், போர்நிறுத்தம் 2001- சமகாலத்திற்கான படிப்பினை நூலை நிமலன் கார்த்திகேயன் வெளியிட்டுவைக்க, முதற் பிரதியை முன்னாள் ஊடகம மற்றும் தகவல் தொடர்புத் துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் பெற்றுக் கொள்வதை இரண்டாவது படத்திலும், தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக சபை உறுப்பினர்களுடன் தேசிய சமாதானப் பேரவை உறுப்பினர்களை மூன்றாவது படத்திலும் காணலாம். (202)

# வலிகாமம் கோட்ட பாடசாலைகளின் கணித, விஞ்ஞான போட்டி முடிவுகள்

(உடுவில்)

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட கோட்டங்களுக்கிடையே நடத்தப்பட்ட கணித, விஞ்ஞான போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. கோட்ட ரீதியாக முதல் ஐந்து இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு:-

### உடுவில் கல்விக் கோட்டம்

**தரம்-6**

சி.இந்துக்கா (உடுவில் மகளிர் கல்லூரி), ச.சக்திபாலன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), பு.நிருபிகா (இணுவில் இந்துக் கல்லூரி), செ.சங்கீதா (இராமநாதன் கல்லூரி), இ.கவிகரன் (ஸ்கந்தவரோதய கல்லூரி)

**தரம்-7**

சி.மாதுமை (ஸ்கந்தவரோதய கல்லூரி) ந.கோகினி (இணுவில் மத்திய கல்லூரி), மா. பார்த்தீபன் (தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), ச.சக்திதாயினி (ஸ்கந்தவரோதய கல்லூரி), பி.லக்சி (உடுவில் மகளிர் கல்லூரி),

**தரம்-8**

உ.சகானா (உடுவில் மகளிர் கல்லூரி), த.வைஷ்ணா (ஸ்கந்தவரோதய கல்லூரி), இ.தனுஜா (உடுவில் மகளிர் கல்லூரி), ம.சங்கீர்தா (இணுவில் இந்துக் கல்லூரி), ப.செந்துளா (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை)

**தரம்-9**

பா.கிரிதரன் (கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாசாலை), ம.தவப்பிரியா (உடுவில் மகளிர் கல்லூரி), க.கலைவாணன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), க.பிரதீபா (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), வே.வித்தியா (உடுவில் மகளிர் கல்லூரி),

**தரம்-10**

பா.கோபி (ஸ்கந்தவரோய கல்லூரி), இ.சுஜித்தா (ஸ்கந்தவரோதய கல்லூரி), ந.லோஜன் (இணுவில் இந்துக் கல்லூரி), நி.பிரியா (இணுவில் மத்திய கல்லூரி), ஸ்ரீ.வசீகரன் (இணுவில் மத்திய கல்லூரி),

### தெல்லிப்பளைக் கல்விக் கோட்டம்

**தரம்-6**

பு.திருமாறன் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), இ.கிஷாயினி (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), சு.ஞானானந்தன் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), த.பிரியதர்சினி (குட்டியப்புலம் அமெரிக்கன் மிஷன் பாடசாலை), கே.வேணுதாஸ் (அளவெட்டி அருணோதயா கல்லூரி)

**தரம்-7**

செ.வைஷ்ணவி (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), க.கபீர்த்தனா தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), க.கோகுலன் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), கி.ஜீவதாஸ் (அளவெட்டி அருணோதயா கல்லூரி), மோ.தர்சிகா (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி)

**தரம்-8**

இ.முரளிதரன் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), பா.நீதுஜன் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), த.சரண்ஜா (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), சி.பிரணவன் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), க.சர்மினி (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி),

**தரம்-9**

கை.அனுஜா (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), ம.மகிலன் (தெலலிப்பளை யூனியன் கல்லூரி), ந.சுகாஜினி (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), க.திருமகள் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), சராதிகா (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி)

**தரம்-10**

ஆ.அனுசுஜா (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), ச.ஜெயந்தன் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), கு.நிரோஜன் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), ஜெ.தவரூபன் (மல்லாகம் மகா வித்தியாலயம்) யோ.கேசீகா (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி)

### சண்டிலிப்பாய் கல்விக்கோட்டம்

**தரம்-6**

வே.ஸ்ரீதேவி (மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயம்) து.புவனா (சுதுமலை சின்மய பாரதி வித்தியாசாலை), ஸ்ரீ.பிரசாந் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), உ.கார்த்திகேயன் (மானிப்பாய் இந்துக்கல்லூரி), க.ஆன்ஜன்மின் (இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்)

**தரம்-7**

பா.சகிலன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ஆர்.ஜெசிக்கா (சென். ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை), செ. நிதர்சன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), சி.பிரணவன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), அ.அன்ரன் தனேஷ் (மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம்)

**தரம்-8**

அ.ஆன்சிந்துஷா (சென்.ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை), யோ.அன்பரசி (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), ஸ்ரீ.சுபாங்கன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), ஸ்ரீ.கீர்த்தினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), தி.ரசில்கரன் (மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம்)

**தரம்-9**

ந.சாகினி இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்), கி.பிரதீபன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), வி.விஜயகுமாரி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), தி.முகுந்தன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), பா.சுகன்ஜா (சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம்)

**தரம்-10**

நா.ஆனந்தசங்கர்யா (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), கு.கஜரூபனா (இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்), த.தர்மி (சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம்), ஆ.ஜெயந்தினி (இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்), த.பிரியலதா (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

### சங்கானை கல்விக்கோட்டம்

**தரம்-6**

ம.மயூரா (வட்டுக்கோட்டை மகளிர் கல்லூரி), ஞா.மகோதரன் (பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), இ.சங்கீதா (சித்தன் கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்), ம.கார்த்திகா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), ப.சர்மிளா (பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்)

**தரம்-7**

எஸ்.தர்சிகா (வட்டு.யாழ்ப்பாண கல்லூரி), இ.பகீரதன் (வட்டு.இ[illegible]க் கல்லூரி), வி.யே.றோச்லி (வட்டு. யாழ்ப்பாண கல்லூரி), செ.தயாளன் (மூளாய் சைவப்பிரகாச மகா வித்தியாலயம்), பி.தர்சன் (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி)

**தரம்-8**

சி.சிவவேணுகா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), ச.விஜயலதா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), கே.லாவண்யா (வட்டு.யாழ்ப்பாண கல்லூரி), சோ.சிவரூபன் (வட்டு. இந்துக் கல்லூரி), ப.பிரகாஷ் (பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்)

**தரம்-9**

ப.தவப்பிரியன் (பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்), அ.யோகினி (வட்டு. மத்திய கல்லூரி), மை.கேசவன் (வட்டு.யாழ்ப்பாண கல்லூரி), ச.மதியழகி (அராலி சரஸ்வதி வித்தியாசாலை), நா.குகதாசன் (வட்டு.மத்திய கல்லூரி)

**தரம்-10**

கு.சௌதாமினி (பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்), எஸ்.நிரஞ்சன் (யாழ்ப்பாண கல்லூரி), கோ.செல்வபவன்யா (பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), எஸ்.துஷ்யந்தி (வட்டு. யாழ்ப்பாண கல்லூரி), கு.குணசாந்தினி (சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி) (101)

நிறைஞ்சனஸ் சங்கானை
இன்று முதல்
சரத்குமார், தேவயானி நடித்த
ஒருவன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
AMERICAN BEAUTY
(சி-1752)

ராஜா யாழ்ப்பாணம்.
பிதாமகன்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1751)

# அரசியல் ரீதியான மாற்றங்கள் எதுவும் சமாதான நடவடிக்கையை பாதிக்காது!

## முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

(கொழும்பு)

அரசியல் மாற்றங்கள் எதுவும் சமாதான நடவடிக்கையைப் பாதிக்காது என உறுதிபடக் கூறியுள்ளார் முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர்.

நூல் அறிமுகவிழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது.

எந்தவோர் அரசியல் மாற்றமும் சமாதான நடவடிக்கையைப் பாதிக்காது. அவ்வாறு பாதிப்பதை அனுமதிக்கவும் முடியாது.

எமது கட்சி இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதில் உறுதியாகவுள்ளது. இதனைச் சீர்குலைக்க எடுக்கப்படும் முயற்சிகள் தோற்கடிக்கப்படும்.

சமாதான முயற்சிகள் உறுதியாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். ஊடகவியலாளரகள் நியாயத்திற்காகவும், சமாதான முயற்சிக்காகவும் உறுதுணையாக நின்று செயற்படல் வேண்டும்.

வடக்கு - தெற்கு ஊடகவியலாளர் சங்கம் நிகழ்வின் மூலம் சமாதானத்தின் குரல் ஒலிக்க ஊடகவியலாளர்கள் உறுதியெடுத்துக்கொளள வேணடும். ஊடக ஒற்றுமையும், வலிமையும் எமது சமாதான முயற்சிக்கு அவசியம் என்றார். (202)



போர்வீரர்கள் நினைவுதினத்தையொட்டி - நேற்றுமுன்தினம் வீகாரமாதேவி பூங்காவில் நடந்த நிகழ்வில், முப்படைத் தளபதிகள் மரியாதை செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

# ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைக்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் கடும் எதிர்ப்பு!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்று நாடாளுமன்றக் கூட்டத்தை ஒத்திவைத்துள்ளமையால் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியையடுத்து - ஜனாதிபதியின் செயற்பாட்டுக்கு வெளிநாடுகளின் இராஜதந்திரிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய செயற்பாடுகளைக் கைவிட வேண்டும் என்று இராஜதந்திரிகள் ஜனாதிபதியிடம் நேரிலும், கடித மூலமும் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வியாழனன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - அமெரிக்கா, இந்தியா, பிரித்தானியா ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தான் எடுத்த நடவடிக்கை தொடர்பாக விளக்கிக் கூறியுள்ளார்.

இராஜதந்திரிகளினதும், சர்வதேச நிறுவனங்களின் அழுத்தத்தையடுத்து ஜனாதிபதி அவசரகால நிலையினை அமுல்படுத்தவில்லை என்று வெள்ளியன்று ஜனாதிபதி செயலகம் அறிக்கை விடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்று நாடாளுமன்றத்தை ஒத்திவைத்ததன் மூலம் அரசாங்கத்தின் பக்கமுள்ள எம்.பிக்களை தமது பக்கம் வரவழைத்து புதிய ஆட்சியினை அமைக்கவே எதிர்க்கட்சியினர் திட்டமிட்டிருந்ததாகவும், ஆனால் அந்த முயற்சி பயனளிக்காமையினால் தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினுள் அதிருப்தி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# போதைப் பொருள் வைத்திருந்த சிப்பாய் கைது!

(வவுனியா)

போதைப்பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் வவுனியாவில் படைச்சிப்பாய் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

சுமார் எண்பது மில்லி கிராம் நிறையுடைய போதைப்பொருளை இவர் வைத்திருந்ததாக இவர்மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் பொலிஸாரால், வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட இவரை, 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு, வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் உத்தரவிட்டார். (03)

### பல்கலைக்கழக நடைமுறைகள் குறித்து

# ஆராயும் தெரிவுக்குழுவின் அறிக்கை அடுத்த மாதம்!

(கொழும்பு)

பல்கலைக்கழக விவகாரங்களுக்கான நாடாளுமன்றத் தெரிவிக்குழு அடுத்த வாரம் கூடவுள்ளது.

கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தலைமையிலான அந்தத் தெரிவிக்குழுவில், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன.

இந்தத் தெரிவுக்குழு பல்கலைக்கழகக் கல்விமுறை குறித்து விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளது.

அத்துடன், பல்கலைக்கழக மாணியங்கள் துணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மெண்டிஸ் தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத் தெரிவுக்குழு, இசற் ஸ்கோர் முறை குறித்தும், பொது பரீட்சை முறை குறைத்தும் ஆராய்ந் துள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன், பல்கலைக்கழகங்களில் தற்போது நிலவும் அமைதியற்ற சூழல் குறித்தும் இந்தக் குழு ஆராய்ந்து வருகின்றது. அடுத்த வாரம் கூடவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு தமது இறுதி அறிக்கையை அடுத்த மாதம் கையளிக்கவிருக்கின்றது.

# கொழும்பு பிரதேசம் முழுவதும் புதிய பாதுகாப்புமுறை அமுல்!

(கொழும்பு)

கொழும்பு பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கும் வகையிலான புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டிருப்பதாக கொழும்பு பிரதி பொலிஸமா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்தார்.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையானது 24 மணிநேரமும் அமுலில் இருக்குமென அவர் மேலும் கூறினார்.

கடந்த காலங்களில் அமுலில் இருந்த பாதுகாப்பு நடவடிக்கைகளே இந்த முறையும் நடைமுறைப்படுத்தப்படுமென அவர் சுட்டிக் காட்டினார்.

விசேடமாக - கொழும்பு பிராந்தியத்தில் பிரதான பாதைகள் அனைத்தும் சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுமென அவர் தெரிவித்தார்.

குறிப்பாக கொகுவெல, தெஹிவளை, வெள்ளவத்தை, பேலியகொட, பாணந்துறை, கிராண்ட்பாஸ், மாளிகாவத்தை, கொட்டாஞ்சேனை, முகத்துவாராம் ஆகிய பொலிஸ் பகுதிகளிலேயே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென பிரதி பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

சந்தேகத்திற்கிடமான நபர்கள் கொழும்பு நகருக்குள் நுழைவதைத் தடுக்கும் முகமாகவே பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

### இலங்கையின் அரசியல் நெருக்கடி

# சமாதான முயற்சிகளைப் பாதிக்காது பங்களாதேஷ் நம்பிக்கை தெரிவிப்பு!

(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் விடுதலைப் புலிகளுடனான அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளைப் பாதிக்காது என்று பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் மொர்சத் கான் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தெற்காசியப் பிராந்திய நாடு என்ற வகையில் இலங்கையில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து பங்களாதேஷ் தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது. இந்த அரசியல் நெருக்கடிகள் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை எந்த வகையிலும் பாதிக்காது என்று நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கடல் விமானப் போக்குவரத்துக்கு தம்புள்ள பகுதி மக்கள் எதிர்ப்பு!

தம்புள்ள குளத்தில் கடல் விமானங்களை இறக்கும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் அங்கு பேரணியொன்று நடத்தப்பட்டது.

நேற்றைய தினம் பரீட்சார்த்தமாக கடல்விமானங்களை இறக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் பெருமளவிலான சிறிய படகுகளை குளத்தில் நிறுத்திப் பேரணி நடத்தப்பட்டிருந்தது.

தம்புள்ள குளத்திலிருந்தே அதனை அண்டியுள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது. அத்துடன் தம்புள்ள குளத்தை மையப்படுத்திப் புதிய மீன்பிடித்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுவருகின்றன. இந்தக் குளத்தைப் பயன்படுத்தி கடல் விமானப் போக்குவரத்துச் சேவையை மேற்கொள்வதன் மூலம் பெருமளவில் சூழல் மாசடைவதுடன் இந்தக் குளத்தை நம்பியுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்படும் எனவும் இந்த எதிர்ப்புப் பேரணியை நடத்தியவர்கள் தெரிவித்தனர்.

தம்புள்ள பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் தொகையை அதிகரிக்கும் நோக்கில், கொழும்பு மற்றும் பிற பகுதிகளில் இருந்தும் கடல் விமானப் போக்குவரத்துக்களை நடத்துவதற்கு சுற்றுலா விமானப் போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பி.பி.சி. நிறுவனத்துடனான ஒப்பந்தம்; ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மீளாய்வு

பி.பி.சி நிறுவனத்தின் செய்திகளை ஒலிபரப்புவதற்கு, அந்த நிறுவனத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தம் குறித்து, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பி.பி.சி செய்திகளை நாளொன்றுக்கு 18 மணிநேரம் ஒலிபரப்ப வருடாந்தம் 75 ஆயிரம் டொலர் குத்தகை வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தொகை மிகக் குறைவானதென்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவர் ஹட்சன் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த ஒப்பந்தத்தை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் முக்தார் மரிக்காரே செய்துகொண்டதாகவும், அவர் ஒரு தொழில்சார் ஒலிபரப்பாளர் அல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பதினொரு பெண்களை கொலை செய்தவர் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் கைது!

(கண்டி)

ஒரு சிறுமி உட்பட 11 பெண்களை கொலை செய்த கொள்ளைக்கார கும்பலை சேர்ந்த ஒருவரை மத்திய பிராந்திய குற்றப் புலனாய்வு பொலிஸார் கைதுசெய்தனர்.

கண்டி மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த பெண்களே கொலைசெய்யப்பட்டவர்களாவர். இவர்கள் கொலைசெய்யப்படுவதற்கு முன்னர் அவர்களிடமிருந்த பெறுமதிவாய்ந்த நகைகள் பலவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

அரச அதிகாரிகள் போல் கிராமப் புறங்களுக்குள் நுழையும் திருடர் குழு, பெண்கள் தனியாக உள்ள வீடுகளைப் பார்த்து தமது கைவரிசையைக் காட்டியுள்ளது.

கொலைசெய்யப்பட்ட பெண்களில் சிலர் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பல்லேகலப் பகுதியில் கொள்ளை ஒன்றில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே மேற்படி நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். இவரது குழுவைச் சேர்ந்த ஏனையவர்கள் தப்பியோடிவிட்டதாகவும், அவர்களைத் தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## புத்தர் சிலையைத் திருடிய இரு பிக்குமார் கைது!

உடுநுவரவில் உள்ள இரண்டு விகாரைகளில் இருந்து பழமை வாய்ந்த இரு புத்தர் சிலைகளை திருடிய இரண்டு இளம் பிக்குகளை கண்டி பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மேலும் எட்டுப் பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### காலி - கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில்

# 2700 இருதய நோயாளர்கள் சத்திரசிகிச்சைக்கு காத்திருப்பு!

(காலி)

காலி - கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் இருதய சிகிச்சைப் பிரிவில் பணியாற்றும் வைத்திய நிபுணர்கள் மற்றும் தாதியர்கள் தொடர்ந்தும் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதால் இருதய சத்திரசிகிச்சைக்காகக் காத்திருப்பவர்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வைத்தியசாலையின் இருதய சிகிச்சைப் பிரிவில் மாதமொன்றுக்கு 35 முதல் 40 நோயாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். தற்போது மொத்தம் 2700 இருதய நோயாளர்கள் இங்கு சிகிச்சைக்காகக் காத்திருப்பதாக கராப்பிட்டிய தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வைத்தியசாலையில் இருதய சத்திரசிகிச்சை நிபுணர்கள் மற்றும் தாதிமார்கள் கடந்த மூன்று வாரங்களாக தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதால் சத்திரசிகிச்சைகள் முற்றாக செயலிழந்துள்ளன.

# புலிகளுடன் இணைவதற்கு அடம்பிடித்தனர் சிறுமிகள்

## வடமராட்சியில் சம்பவம்

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணையவந்த இரு சிறுமிகள் - விடுதலைப்புலிகளால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் பெற்றோரிடம் ஒப் படைக்கப்பட்டபோதிலும், அவர்கள் வீடுசெல்ல மறுத்த சம்பவம் ஒன்று, நேற்றுமுன்தினம் தமிழீழ விடுத லைப் புலிகளின் வடமராட்சிக் கோட்ட அரசியற் பணிமனையில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் பற்றி தெரியவரு வதாவது -

நேற்றுமுன்தினம் காலை சக் கோட்டை அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த இரு மாணவிகள் - வதிரி யிலுள்ள புலிகளின், வடமராட்சிக் கோட்ட அரசியற பணிமனைக்குச் சென்று, தம்மை விடுதலைப்புலிகள் அமைப்பில் சேர்க்குமாறு கேட் டுள்ளனர்.

படையினரின் அச்சுறுத்தலினா லேயே தாம் புலிகள் அமைப்பில் சேரவந்திருப்பதாகவும் தெரிவித் திருந்தனர்.

எனினும், அவர்கள் 18 வயதிற்கு குறைந்தவர்களாக இருந்தமையால், பெற்றோருக்குத் தகவல் கொடுத்து, அவர்களிடம் சிறுமிகளை ஒப்படைக்க ஒழுங்கு செய்யப்பட்டது.

எனினும், தாம் வீடுசெல்ல விரும்ப வில்லை எனச் சிறுமிகள் மறுத்துள் ளனர்.

இதனை அடுத்து, அங்கு வந்த யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் பிரதித் தலை வர் மற்றும் புலிகள் பிரதிநிதிகள்- அவர்களுடன் பேசி, படையினரால் அச்சுறுத்தல்கள் ஏற்படாதிருக்க வழி செய்வதாக உறுதியளித்த பின்னர், சிறுமிகள் பெற்றோருடன் சென்றனர். (202)

### புலமைப்பரிசில் பரீட்சை

புலமைப்பரிசில் மாதிரிப் பரீட் சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள்- எதிர்வரும் 16 ஆம் திகதி காலை, அந்தந்தப் பரீட்சை நிலையங்களுக் குச் சமுகமளிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வ ரன் தெரிவித்துள்ளார்.

பொதுப் பரீட்சைக்குத் தோற்ற வுள்ளவர்களே இந்தப் பரீட்சையி லும் தோற்றமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)



நேற்று நடைபெற்ற யாழ்.சன்மார்க்க வித்தியாசாலை கணினி அறை திறப்புவிழாவில், புதிய கணினி அறையை ஐ.ஐ.எஸ் நிறுவன இயக்குநர் கே.விக்னேஸ் - நாடாவை வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# சமுர்த்தி பயனாளிகளுக்கு மூலதன உபகரணங்கள்

2003 ஆம் ஆண்டுக்கான சமுர்த்தி சந்தைப்படுத்தல் செயற் திட்டத்தின் கீழ் - வீட்டு விற்பனை நிலையங்கள், நடமாடும் விற்பனை வாகனம் என்பவற்றுக்கு, மூலதன உபகரணங்களை வாங்குவதற்கு வட்டியில்லாக்கடன் வழங்கப்பட வுள்ளது.

இதன் அடிப்படையில், நெடுந் தீவுப் பிரதேச செயலாளர் பிரிவின் வீட்டு விற்பனை நிலையங்கள் நான்கிற்கு - தலா 10 ஆயிரம் ரூபா வீதமும், நடமாடும் விற்பனை தள்ளுவண்டி ஒன்றுக்கு - 25 ஆயிரம் ரூபாவும் கடனாக வழங்குவதற்கு ஏற் பாடு செய்யப்பட்டு, நிதியும் விடுவிக் கப்பட்டுள்ளது.

இந்த நிதியினை இந்த வரு டத்திற்குள் பயன்படுத்தி, பய னாளிகள் பயன்பெற வழியமைக்கு மாறு, சமுர்த்தி முகாமையாளர் களை - சமுர்த்தி அதிகாரசபை பணியாளர் நாயகம் கோரியுள்ளார். (113)

# சுயதொழில் முயற்சியாளருக்கு உதவிக் கொடுப்பனவுகள்

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் -புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ், சுயதொழில் வழங் கல் நடவடிக்கைமூலம், வடக்கு- கிழக்கு மாகாண சமூகநலத்துறைத் திணைக்களத்தால், நெடுந்தீவு பிர தேச செயலர் பிரிவிலுள்ளவர்க ளுக்கு தலா 5000 ரூபா உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், உதவி பெறுவோரின் பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவானது, உதவிக்கொடுப்பனவு வழங்கப்பட்டு ஆறுமாதகாலத்தின் பின், நிறுத் தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

### தீவகப் பாடசாலைகளில் ஆண்டிறுதிப் பரீட்சை

தீவக வலயப் பாடசாலைகளில், வலயக் கல்விப் பணிமனையால் நடத்தப்படுகின்ற ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதிவரை நடை பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது. இப்பரீட்சை தரம் 5, 6, 7, 8,10 ஆகியவற்றுக்கே நடைபெறவுள்ளது. பரீட்சை வினாத்தாளின் முதலாவது தொகுதியை கோட்டக்கல்வி பணி மனையில் 14 ஆம் திகதி பெற் றுக்கொள்ள முடியும்.

# நடமாடும் சேவையில் ஆணையாளரின் அனுமதிபெற்ற வாகனங்களுக்கான பதிவுகள் நேற்று முதல் ஆரம்பம்

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நடாத்திய நடமாடும் சேவையின்போது, தமது விண்ணப் பங்களில் அதிகாரிகளின் ஒப்பம் பெற்ற வாகன உரிமையாளர்கள் - தமது வாகனங்களை நேற்றுமுதல் பதிவுசெய்ய ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளது.

மூன்று தினங்கள் நடைபெற்ற நடமாடும் சேவையின்போது, அதி களவான மக்கள் வந்திருந்த கார ணத்தினால், 500 இற்கும் அதிக மானவர்களுக்கு வாகனங்களைப் பதிவு செய்யமுடியாதநிலை ஏற் பட்டது. இதனால், இவர்களுடைய விண்ணப்பங்களில் திணைக்கள அதிகாரிகள் ஒப்பமிட்டு, தமது இலட் சினையைப் பதித்தனர்.

இவர்கள் யாழ். மாவட்டச் செய லகத்தின் மோட்டார் போக்குவரத் துத் திணைக்களத்தில், பதிவுகளை உடனடியாக மேற்கொள்ள நடவடிக் கைகள் எடுக்கப்படுமென அதிகாரிக ளால் உறுதி வழங்கப்பட்டது.

அதன் பிரகாரமே நேற்று முதல் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை, ஆவ ணங்களற்ற தமது வாகனங்களைப் பதிவுசெய்ய, வாகன உரிமையாளர் களுக்கு வசதி செய்துகொடுக்கப் பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையின் போது, பயன்பெறாதவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்படவுள் ளன. இதேபோன்றதொரு நடமாடும் சேவை, மிகவிரைவில் கிளிநொச்சி யில் நடைபெறவுள்ளதாக -மோட் டார் போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்திலுள்ளவர்கள் தமது முறைப்பாடுகளை நேரடியாக மோட்டார் போக்குவரத்துத் திணைக் கள ஆணையாளருக்கு அனுப்புவ தன்மூலம், தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப பட்டது. (ச)

### மூளைக்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றல்

தெல்லிப்பளை சுகாதார வைத் திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில், இரண்டாம் கட்ட மூளைக்காய்ச்சல் தடுப்பூசி - எதிர் வரும் வியாழக்கிழமை வழங்கப்பட வுள்ளது.

தெல்லிப்பளை புனர்வாழ்வு நிலையத்திலும், உடுவில், ஏழாலை, அளவெட்டி, புன்னாலைக்கட்டுவன், இணுவில், சுன்னாகம் ஆகிய இடங் களிலுள்ள மருந்துக்களிலும் தடுப் பூசி வழங்கப்படவுள்ளது.

இரண்டு வயதிற்குட்பட்ட அனைத் துக் குழந்தைகளுக்கும் இந்த தடுப்பூசி ஏற்றப்படவேண்டும் என் பது குறிப்பிடத்தக்கது. (42)

### நயினாதீவில் பொதுஇடங்கள் சிரமதானம்

நயினாதீவில்- உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன், பொதுஇடங்கள் சிரமதானமுறை யில் துப்பரவு செய்யப்பட்டு வரு கிறது.

இங்குள்ள அரசினர் வைத்திய சாலையின் சுற்றுப்புறம், இந்து மயானப்பகுதி போன்ற பொதுஇடங் கள் - இப்பிரதேசமக்களால் சிரமதா னம் செய்யப்பட்டு வருகின்றது.

சிரமாதானப் பணியில் ஈடுபடும் நபரொருவருக்கு அரிசி, பருப்பு மற் றும் சீனி போன்ற உலர் உணவுப் பொருட்கள் -கூட்டுறவுச் சங்கக்கடை யில் வைத்து விநியோகிக்கப்படுகின் றது. (83)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : ச.அபிராமி
முகவரி : 520, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றாவது அகவையில்

பெயர் : ம.லக்ஷிகா
முகவரி : அம்மன் வீதி, திருநெல்வேலி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்


# ஐம்பதிற்கு மேற்பட்ட கைக்குண்டுகள் அளவெட்டியில் படையினரால் மீட்பு

எண்ணெய் பரல் ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில், ஐம்பதுக்கு மேற்பட்ட கைக்குண்டு கள் - அளவெட்டியில் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அளவெட்டி நகுலேஸ்வரா வீதி யில் நீண்டகாலமாகப் பயிர்செய்யப்ப டாது, பற்றை மண்டிக்கிடந்த தோட் டக்காணியொன்றில் இருந்தே, இக் கைக் குண்டுகள் வெடிக்கத்தக்க நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

நாயொன்றின் சடலத்தைப் புதைப் பதற்காகப் பொதுமகனொருவர் கிடங்கு ஒன்றைவெட்டியபோது, இந்த எண்ணெய் பரல் கண்களில் தென்பட்டுள்ளது. பரலைப் பிரிந்துப் பார்த்தபோது, நல்லநிலையிலுள்ள கைக்குண்டுகளைக் கண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் படையி னருக்குத் தெரியப்படுத்தவே, குறித்த இடத்திற்கு வந்த படையினர் - கைக்குண்டுகளை மீட்டெடுத்துச் சென்ற தாகக் கூறப்படுகிறது. இச்சம்பவத் தையடுத்து, இந்தப் பகுதியில் படை யினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்தக் கைக்குண்டுகளைப் பரி சோதித்த படையினர் - மிக அண் மைக்காலத்திலேயே இவை புதைக் கப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரி வித்துள்ளனர்.

அளவெட்டி பகுதி - இராணுவத் தினரால் முழுமையாக கைப்பற்றப் பட்டபோது, மக்கள் இடம்பெயர்ந்து செல்ல, இப்பகுதியிலுள்ள வீடுகளில் இராணுவத்தினர் முகாமிட்டு இருந் தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்ட சம்பவத்தையடுத்து, குறிப்பிட்ட காணிஉரிமையாளரையும்,அயலவர் களையும் படையினர் தீவிர விசார ணைக்குட்படுத்தினர். இளைஞர்கள் சிலரையும், விசாரணைக்குட்படுத் திய சிவில் உடை தரித்த இராணு வத்தினர் - அந்த இளைஞர்களின் பெயர் விபரங்களைப் பெற்றுச்சென் றதாகவும் கூறப்படுகிறது. (ச)

### ஆலயம் புனரமைப்பு

கடந்தகால யுத்த நடவடிக்கை யின்போது, முற்றுமுழுதாகத் தரை மட்டமாகியிருந்த செம்மணி நுழை வாயிலில் உள்ள பிள்ளையார் ஆல யம் - தற்போது துரிதகதியில் புனர மைக்கப்பட்டு வருகின்றது.

தற்போது ஆலயச் சூழலில் மிதி வெடியகற்றும் பணி மும்முரமாக நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கது. (24)

# செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள்



செவ்வாய்க்கிரகத்தில் உயிரினங்கள் தொடர்பான ஆய்வில் - "வைக்கிங்" என்ற செய்மதி - 1970 ஆம் ஆண்டுகளில் ஈடுபட்டிருந்தது.

"வைக்கிங்" - செவ்வாயில் நடத்திய பரிசோதனைகளில்- கரி (cabon) எனப்படும், உயிரினங்களின் அடிப்படை மூலகத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதன்மூலம், செவ்வாயில் உயிரினங்கள் வாழ்ந்திருக்கவில்லை என்ற கருத்தை விஞ்ஞானிகள் வெளிப்படுத்தி இருந்தார்கள்.

ஆனால், "வைக்கிங்" இன் ஆய்வுகள் சரியானமுறையில் நடத்தப்படவில்லை என்ற கருத்தைப் பல விஞ்ஞானிகள் வெளிப்படுத்தி இருந்தார்கள்.


இதனிடையே சில்லியில் "அரகமா" பாலைவனத்தில் காணப்பட்ட மண்ணின் இரசாயன இயல்புகள் - செவ்வாயில் "வைக்கிங்" நடத்திய பரிசோதனையில் கிடைத்த மண்ணின் இயல்புகளுக்கு ஒத்திருப்பதை அவதானித்தார்கள்.

1976 ஆம் ஆண்டு அனுப்பபட்ட "வைக்கிங் - 1" என்ற கலம் - நுண் உயிர்கள் சுவாசத்தின்மூலம், வாயுக்களை வெளிப்படுத்தியதை அவதானித்தது. ஆனாலும், உயிரினங்கள் அங்கு இல்லை என்றகருத்து தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டே வந்தது. ஆனால், அரகமா பாலைவனத்தில் நடத்தப்பட்ட மண்பரிசோதனைகள் - சில உண்மைகளைத் தெளிவுபடுத்தியுள்ள ன.

நீர், சூரிய ஒளிகுறைவாகவுள்ள பிரதேசங்களில், உயிர்களில் தோற்றம் இருந்தாலும், அவற்றை அசேதன நிலைக்கு (Decompose) மாற்றிவிடுகின்றன என்ற உண்மை தெரியவந்துள்ளது. இதில் உயிர் தோன்றினாலும், வாழும் சாத்தியம் இல்லை என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.




# காசநோய்



போவியன் காசநோய் எனப்படும் ஒருவித நோயினால், பசு மந்தைகள் - பிரித்தானியாவில் பெருமளவில் பாதிக்கப்பட்டுவருகின்றன.

இந்தநோயை "பாட்சர்" எனப்படும் ஒருவகை சிறிய மிருகங்களே காவிச்செல்கின்றன. இதனால், பிரித்தானியாவில் ஒவ்வொரு ஆண்டும் அதிகளவில் பசுமந்தைகள் கொல்லப்பட்டு வருகின்றன. இவற்றைத் தடுப்பதற்கு, இப்பாட்சர் இனத்தை அழிப்பதற்குத் திட்டமிட்டுள்ளார்கள்.

பசு மந்தைகள் கொல்லப்படும்போது, ஏற்படும் இழப்பிலும் பார்க்க, "பர்ட்சர்களை" கொல்வது மேலானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வரட்சி




மனிதன் உயிர் வாழ் வதற்கு நீரும், உணவும் அவசியமாகும். இன்று ஆபிரிக்க நாடு அதிகரித்து வரும் வரட்சியால், உணவு உற்பத்திக்கும், குடிநீர்த் தேவைகளுக்கும் நீரைப்பெற்றுக்கொள்ள முடியாதநிலையிலுள்ளன. இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் வருடாந்த உணவு உற்பத்திக்கு ஈடான தொகையளவு தானியத்தை - ஆபிரிக்கா வரட்சியின் காரணமாக இழந்து வருகின்றது.

இதனால், கிடைக்கக்கூடிய நீரை - உகந்தமுறையில் பயன்படுத்தப்படுவது அவசியமாகக் கருதப்படுகின்றது. குறைவான நீரைப் பயன்படுத்தி, கூடிய விளைச்சலைப் பெறுவதற்கான தாவரங்கள் தொடர்பான ஆய்வுகளில், சர்வதேச விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

வரட்சிக்கெதிராக நிலைத்திருக்கக்கூடிய தாவரங்களை அறிமுகப்படுத்துவதும் - ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் - 9 ஆற்றுப்படுக்கைகளைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். இவற்றில் ஆபிரிக்க நாடுகளுக்கு ஏற்ற பார்லி (barley) இனத் தானியங்களை விருத்திசெய்வதிலும், வெள்ளத்தைத் தேக்கி, நன்னீர் மீன்வளர்ப்பு முறைகளையும் நடைமுறைப்படுத்துவது குறித்தும் ஆராய்ந்துவருகின்றார்கள்.

# சர்சைக்குரிய எலும்புகள்



பிரித்தானியாவிலுள்ள ஒரு அருங்காட்சிச்சாலையில்- அவுஸ்திரேலியா பழங்குடி மக்களின் எலும்புகளையும், மண்டை ஓடுகளையும் சேகரித்து வைத்திருந்தார்கள். தற்போது அவற்றை மீண்டும் அங்குவாழும் பழங்குடியினரிடம் (Aborigines) கையளிப்பதற்குப் பிரித்தானியப் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் - குழுவொன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளார்கள்.

எவ்வாறு அந்த அருங்காட்சிச்சாலைக்கு அவை கிடைத்தன என்பதை ஆராயவேண்டும் என அங்கத்தவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள். இவ்வெலும்புகளைச் சமய ஆசாரமுறைப்படி அடக்கம் செய்யவேண்டும் எனப் பழங்குடி மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். அதனால், பல மானிடவியல் அறிஞர்கள் (Anthropologists) - அவற்றை திரும்பவும் கொடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்.

மனிதனின் ஆரம்பமும், வளர்ச்சியும் இந்த எலும்புகளை ஆராய்வதன்மூலம் அறியலாம் என அவர்கள் கருதுகின்றார்கள். மேலும் நோய்களின் ஆரம்பம், அது எவ்வாறு நாடுகளுக்கிடையே பரவியது என்பதையும் அறியமுடியும் எனவும் தெரிவித்தார்கள்.

இவற்றை வெளிநாட்டு ஆய்வாளர்கள் களவாடிச் சென்றதால், அவுஸ்திரேலியாவில் பழங்குடி தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் - வெளிநாடுகளை நோக்கிச் செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இங்கு எலும்புகள், மண்டை ஓடுகளை - நவீன பகுப்பாய்வுமுறையில் (Analytical technigues) - ஆரம்ப காலத்தில் மனிதர்களின் குடிப்பரம்பல், அவர்கள் வாழ்ந்த இடங்கள், இணைந்து கொண்ட இனங்கள் ஆகியவற்றை அறியமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# புதிய எக்ஸ்ரே



இதுவரை எக்ஸ்ரே எனப்படும் கண்ணுக்குப் புலப்படாத கதிர்வீச்சின்மூலம் - மனித உடம்பின் எலும்பு, நோய் ஏற்பட்டுள்ள பாகங்களை அறிந்துகொள்வதற்குப் பாவிக்கப்பட்டது. தற்போது பிரித்தானியாவிலுள்ள நிறுவனம் ஒன்று - இக்கதிர்களின்மூலம் நிலத்திற்கடியில் புதைந்துள்ள பொருட்களைப் பார்வையிடுவதற்குப் புதிய கருவிகளைக் கண்டுபிடித்துள்ளது. பழமையான கட்டடத்தின் சுவர்களுள்ளே அல்லது தரைக்கடியில் இருப்பவற்றை இக்கருவியின்மூலம் கண்டுபிடித்துக் கொள்வதற்கு வழிபிறந்துள்ளது.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது, குண்டுத் தாக்குதல்கள் நடாத்துவதற்காக - வானத்திலிருந்து எடுக்கப்பட்ட வரைபடங்களுடன், நவீனமுறையிலான வானத்திலிருந்து எடுக்கப்பட்ட வரைபடங்களையும் இணைத்து, இப்படங்களை உருவாக்குகின்றார்கள்.

இதன்மூலம், புதிய வீடு ஒன்றை ஒருவர் கட்டுவதற்கு முன்னர், தரையின் அடிப்பாகத்தில் அமைந்துள்ள எண்ணெய்த் தாங்கிகள், வேறு சந்தேகத்திற்கு இடமான பொருட்களை அறியமுடிகிறது. இதன்மூலம், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, மண்ணில் புதைந்துள்ள கலைச் சின்னங்களையும் கண்டுபிடிக்க உதவியாக உள்ளது.

# பழைய மனிதன்

எமது மூதாதையர்களுக்கும் தமது பற்களைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்திருக்கலாம் என சுவடிகள் (PALAENTOLOGY) தொடர்பான ஆய்வில் ஈடுபட்ட அறிஞர் லெஷ்லியா தெரிவித்தார். ஆதிமனிதனின் பற்களை ஆராய்ந்தபோது, பற்களில் ஆழமாகப் பதிந்துள்ள (GROOVES) கோடுகளைக் காணநேர்ந்தது. இந்தப் பற்கள் 1.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும். புற்களின் தண்டுகளால் பல்லைத் தேய்த்ததால் ஏற்பட்டிருக்கலாம் என அவர் தெரிவித்தார்.





ஆனால், இந்தக் கருத்தை தற்காலத்து மானிடவியல் (ANTHORO POLOGY) தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ளவர்கள் வரவேற்கவில்லை. குறிப்பாகப் புல்லின் தண்டுகளைப் பாவிக்கவில்லை என வாதிட்டனர். ஆனால், புல்லின் தண்டில் பெருமளவில் சொரசொரப்பான (ABRASIVE) துணிக்கைகள் இருப்பதையும், புல்லின் தண்டின் விட்டமான 1.5 இற்கும் 2.6 மில்லிமீற்றரே பற்களில் காணப்பட்ட கோடுகளிலும் இருப்பதை நிரூபித்தார்.

ஆதிகாலத்து மனிதர்கள் - தமது பற்களின் ஈறுகளில் (GAM) ஏற்பட்ட 'நோ' வின் காரணமாக, இந்தக் குச்சிகளைப் பாவித்திருக்கலாம் எனவும் தெரிவித்தார். ஆதிகாலத்து குரங்கிலிருந்து எடுத்த பல் ஒன்றை, 8 மணித்தியாலங்கள் புல்லின் தண்டுகளினால் தேய்த்து, கோடுகளை உருவாக்கினர்.

பின், தற்காலத்து மனிதன் ஒருவரின் பல்லிலும் இதேபோன்று புல்லின் தண்டினால் 3 மணித்தியாலங்கள் தேய்த்தார்.

இலத்திரன் நுணுக்குக்காட்டியில் - இரு பற்களையும் ஆராய்ந்தபோது, அவற்றில் காணப்பட்ட கோடுகள் ஒத்திருப்பதை அவதானிக்கமுடிந்தது. சீனா, இந்தியா, ஜப்பான், ஈரான் ஆகிய நாடுகளின் - தொன்மைமிக்க நாகரிகங்களில் பற்குச்சிகள் இடம்பெற்றுள்ளதை அவதானிக்கமுடிந்தது.

# பண்டாக்களை காப்பாற்றும் திட்டம்

கரடி இனத்தைச் சேர்ந்த பண்டாக்கள் அழிந்துபோகும் நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றன. இவ்வினத்தைச் சேர்ந்த பண்டாக்கள் இன்று 1000 மாத்திரமே டைக்குவிலுள்ள 'சிசு அன்' மலைப்பகுதிகளில் காணப்படுகின்றன. "பண்டாக்கள்" மூங்கில் குருத்துகளை மாத்திரமே உணவாக எடுத்துக்கொள்கின் றன. இவற்றை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு, செயற்கை முறையில் இந்த இனத்தை உற்பத்தி செய்யவேண்டி யேற்பட்டுள்ளது.



சீனாவில் "பண்டா இனப் பெருக்கத் திட்டம்" என்ற அமைப் பினை உருவாக்கியுள்ளார்கள்.


உலகிலுள்ள மிருகக்காட்சிச் சாலைகளில் இவற்றின் இனத்தை பெருக்குவதற்குத் திட்டமிட்டுள்ளார் கள். இதனைச் செயற்கைமுறை யில் இனப்பெருக்கம் செய்யவுள் ளனர்.

சீனாவில் 2001 ஆம் ஆண்டு- செயற்கைமுறையில் 12 பண்டாக் கள் பிறந்தன. 2002 ஆம் ஆண்டில் மேலும் 10 பண்டாக்கள் பிறந்தன.

உலகிலுள்ள மிருகக்காட்சிச்சாலைகளிலும், ஆய்வு நிலையங்களிலும் 140 வளர்ந்த பண்டாக்கள் உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

# பிள்ளைகளே உஷார்

பிள்ளைகள் எங்கே செல்கின்றார்கள் என்பதை அறிவதில், பெற்றோர்கள் பலவேளையில் அதிக ஆர்வம் காட்டுவதுண்டு. இவர்களுக்கு உதவிபுரிவதற்கு - அமெரிக்காவில் உள்ள நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.




இதனிடையே, உலகில் முதலில் கையடக் கத் தொலைபேசியை அறிமுகப்படுத்திய பின்லாந்தில், பிள்ளைகளின் நடவடிக்கை களைப் பெற்றோர்கள் அவதானிப்பதற்கான, சட்டத்தை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வருதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், வீட்டிலிருந்த வண்ணமே தமது கணினி வலைமூலம், அவதானிக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இத்திட்டத்தின் பிரகாரம் - பிள்ளைகள் வெளியே செல்லும் போது, தமது மணிக்கூட்டிலோ அல்லது தமது புத்தகப்பையிலோ இந்த உபகரணத்தை எடுத் துச்செல்லமுடியும்.

செயற்கைக் கோள்களின்மூலம், நிலை அறியும் அமைப்பில்' **(Satellite Positioning System)** முக்கோணத் தொடர்பொன்று ஏற்படுத்தப்படுகின்றது. இதன்மூலம், பெற்றோர்களின் தகவல்கள் - செயற்கைக்கோளுக்கும், பின் செயற்கைக்கோளிலிருந்து செய்திகள் படத்தில் காணப்படும் நிலையங்களுக்கும், அந்நிலையங்களில் தமக்கிடையே பிள்ளைகள் நிற்கின்ற இடத்திற்கு அருகாமையிலுள்ள நிலையத்திற்கும், பின் இந்த நிலையம் பிள்ளைகளுக்கு தமது வீட்டிலுள்ள கணினிக்கும். வரைபடம்மூலம் தகவல்களைத் தெரிவிக்கின்றது.

# முற்றாக அழிந்துபோன ரஷ்மேனியப் புலிகள்

ரஷ்மேனிய புலி எனப்படும் ஒருவகைப் புலியினம், இன்று உலகில் இருந்து முற்றாக மறைந்துவிட்டது. 1936 ஆம் ஆண்டில், இறுதியாக மிருகக்காட்சிச்சாலையில் காணப்பட்ட புலியும் மறைந்துவிட்டது.



அவுஸ்திரேலியாவில் 4500 ஆண்டுகளுக்கு முன்னர் டிங்கோ எனப்படும் காட்டுநாய்கள் காணப்பட்டன. இந்த நாய்கள் கூட்டமாக வேட்டையாடும் பழக்கம் உடையன.

ரஷ்மேனியப் புலிகளை இந்த நாய்கள் தமது உணவிற்காக வேகமாக அழிக்கத் தொடங்கின. ஆனால், ரஷ்மேனியா எனப்படும் பிரதேசம் - கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரமான பிரதேசத்தில் காணப்பட்டதால், ரஷ்மேனியப் புலிகள் தமது இனத்தை ஓரளவு காப்பாற்றிக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

ஆனால், அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த பழங்குடி மக்கள் - கூடுதலான நிலங்களைப் பாவிக்க முற்பட்டபோது, இந்தப் புலிகளை வேட்டையாடத் தொடங்கினார்கள். 18 ஆம் நூற்றாண்டில் அவுஸ்திரேலியாவில் செம்மறி ஆட்டு மந்தை வளர்ப்போரும், இந்த இனப்புலிகளை அதன் முழுமையான அழிவிற்குக் கொண்டு சென்றார்கள்.

குளோனிங் எனப்படும் முறையில், இந்த இனப்புலிகளை மீண்டும் உருவாக்குவதற்கு விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளார்கள்.

# சிலந்திகள்

காடுகளில் ஓநாய்ச் சிலந்தி **(Wolf Spider)** எனப்படும் சிலந்தி இனத்தில், ஆண் சிலந்திகள்- பெண் சிலந்திக்களைவிட வேகமாக முதிர்ச்சி அடைகின்றன.

மேலும், இனவிருத்திக்குப் போதிய முதிர்ச்சி அடையாத பெண் ஓநாய்ச் சிலந்தியிடம், முதிர்ச்சி அடைந்த ஆண் சிலந்திகள் - அவற் றைக் கவர்வதற்காகப் பல உத்தி களை வெளிப்படுத்துகின்றன. குறிப் பாகத் தனது பல நிறங்களைக் கொண்ட முன்காலை உயர்த்தி, பெண் சிலந் தியை கவரமுற்படுகின்றன. இந்த நிறங்கள் ஒவ்வொரு சிலந்தியிலும் சிறிதளவு வேறுபட்டுக்காணப்படுகின் றன.




பிற்காலத்தில் பெண்சிலந்திகள் இனவிருத்திக்கு ஏற்ற முதிர்ச்சி அடை யும்போது, முதிர்ச்சி அடையாத காலத் தில் சந்தித்த சிலந்தியை நன்கு ஞாப கத்தில் தான் வைத்துக்கொள்கின்றன.

பின்னர் முதிர்ச்சி அடையாத காலத்தில் சந்தித்த ஆண் ஓநாய்ச் சிலந்தியை ஒத்த உருவ அமைப்புக் கொண்டவற்றைத் தவிர, மற்றைய ஆண் சிலந்திகளைத் தனது இரையாக் கிக் கொள்கின்றன. இதன்மூலம், தனது சமூகத்துக்குள் இனவிருத்தியை விரும்புவதாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆனால், பல முலையூட்டிகள் **(Mammals)** - மிகவும் பழகப்பட்ட தமது இனத்திடையே இனவிருத்தித் தொடர்புகளை வைத்துக்கொள்ள விரும்புவதில்லை. இதன்மூலம் வலிமைமிக்க இனமொன்றை உருவாக்க எத்தனிக்கின்றன.

# திரை விமர்சனம்

## பிதாமகன்

விக்ரம் - சேது படத்தின்மூலம் தனனுடைய நடிப்பாற்றலை வெளிப் படுத்தத் தொடங்கி, காசி படத் தின்மூலம் விஸ்பரூபமாகி, சினிமா ரசிகர்களின் பார்வையைத் தன்னை நோக்கித் திரும்ப வைத்த வர். இதன்மூலம், விக்ரமி னாலும் நடிக்க முடியும் என்ற நிலையை, ரசிகர் களின் மத்தியில் உரு வாக்கியவர். இரண்டு ஸ்டார் ஹீரோக்களை இணைத் துப் படம் எடுப்பது தற்போ தைய தமிழ் சினிமாப்பாணி. அந்தவகையில் சூர்யா + விக்ரம். இவர்களுடன் லைலாவும் இணைந்து, மூவருமாக ஒரு கலக்கு கலக்கியிருக்கிறார்கள். சுடலையில் வெட்டியானாக வருகின்ற விக்ரம் -தன்னை ஒரு முரட்டுத்தனமான ஆளா கக் காட்டியிருக்கின்றார். தானுண்டு, தன்வேலையுண்டு என்று இருக்கின்ற விக்ரமின் நண்பர்தான் சூர்யா. சூர்யா - விக்ரமுக்காக உயிரையும் கொடுக்கக்கூடியவராக இருக்கி ன்றார். அற்புதமான கதையம்சத்தை பாலாவின் இயக்கத்தில் காணக்கூடியதாக இருக் கின்றது. ஒளிப்பதிவு - பாலசுப்ரமணியன், இசைஞானி இளையராஜா தன்னுடைய பழமை கலந்த, புதிய பாணியில் இசை அமைத்திருக்கிறார். ஒரு பாடலுக்காகச் சிமரன் நடனமாடி விட்டுப்போய் விடுகிறார். பாலாவின் இயக்கத்தில் சேதுவைப் பாத்ததற்கும், பிதாமகனைப் பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றது.



சேது முரட்டுத்தனம் கலந்த காதல்கதை, பிதாமகன் முரட்டுத்தனம் கலந்தபாசம். விக்ரமுக்கு பிதாமகன் ஒரு புதுமுகம்தான்.

# கடல் கழிவுகள்



கஸ்பியன் கடலை எல்லையாகக் கொண்டுள்ள ஆசிய நாடுகளில் அசர்பைசான், ஈரான், கசகஸ்தான், ரஷ்யா, துர்க்மெனிஸ்தான் ஒப்பந்தம் ஒன்றிற்கு உடன்பட்டுள்ளன. இதன்மூலம் அக்கடலின் சூழலியலைப் பாதுகாப்பதென உறுதி கொண்டுள்ளன. இவ் ஒப்பந்தம் - ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் முன்னெடுக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

இதன்மூலம், கடலிற்குள் கொட்டப்படும் கழிவுப்பொருட்களின் தொகையைக் கட்டுப்படுத்த உள்ளனர்.

இரசாயனக் கழிவுப்பொருட்கள், எண்ணெய்க்கசிவு, விவசாய பாவனையின் கிருமி நாசினிகள், உரம் ஆகியவற்றின் கழிவுகள், சூழலின் சமநிலையை **(Ecological Imbalancing)** பாதித்துள்ளதாகவும் அறியப்பட்டுள்ளது. நீண்ட எண்ணெய்க்குழாய் ஒன்றையும் இக்கடலூடாக உலக வங்கியின் உதவியோடு அமைக்கத் திட்டமிடப்பட்டுள் ளது. கடலின் ஊடாகச் செல்லும் உலகின் மிகநீளமான எண்ணெய்க்குழாய் இதுவெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணெய்க் குழாயால் கடலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் உலக வங்கி தெரிவித்திருந்தது.

# வாரம் ஒரு யோகாசனம்

## ஹனுமாசனம்

**முதல்நிலையாக மண்டு ஆசனம் செய்ய வேண்டும். பின்னர் நேர்கோட்டில் நிற்க வேண்டும். இரு பாதங்களையும் இரு பக்**



*தருபவர் - மா.மகாநேசன்.*

**கமும் விரிக்கவேண்டும். அப்படியே தரையில் அமரவேண்டும். ஆரம்பத்தில் கால் தொடைகள் வலிக்கும். பயப்படத்தேவையில்லை. 10 நிமிடங்கள் செய்யவேண்டும்.**

### நன்மைகள்

**ஹனுமாசனம் இரண்டு கால்பாதங்களுக்கும் அதிக வலுவை ஊட்டும். பக்க வாதம், நாரிப்பிடிப்பு வராது. வந்தாலும் குணமாகும். பெண்களுக்கு அதிகமான நன்மைகள் உண்டு. மாதவிடாய் சம்மந்தமான கோளாறுகள் குணமாகும். சுகப்பிரசவம் உண்டாகும். பிரசவத்தின்போது வலிகுறையும். சலக்கடுப்பு, மலச்சிக்கல் நீங்கும். விளையாட்டு வீரர்களுக்கு அதிக பயனைக்கொடுக்கும்.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அன்பு அகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்*
*அன்புஇல் அதன் அறம்.*

-திருக்குறள்.

# நமது நோக்கு

## சமாதான நகர்வை பொறுப்பேற்பது யார்?

சிறிலங்காவின் 'தில்லுமுல்லு' அல்லது கழுத்தறுப்பு, அரசியல் அரங்கில், விறுவிறுப்பானதும் விநோதமானதுமான சாட்சிகள் அரங்கேறத் தொடங்கியுள்ளன.

ஆளும் கட்சியினரும், ஜனாதிபதியும் ஆளையால் பொறிக்குள் சிக்கவைக்கும் வியூகங்களை அமைப்பதற்கான மூலோபாயங்களை ஆராய்வதிலும், அதற்கான திட்டமிடல்களை மேற்கொள்வதிலும், அதில் சிலவற்றை நடைமுறைப்படுத்த முனைவதிலும் தீவிரமாக இயங்கிவருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஐ.தே.முன்னணி அரசின் பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களை சந்திரிகா தன் அதிகார பலத்தை பயன்படுத்திப் பிரதமர் நாட்டில் இல்லாத சமயம் பார்த்து மேற்கொண்ட ஒரு அரசியல் சதிமூலோபாயத்தின் மூலம் கையகப்படுத்திக்கொண்டதையடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பம் நாளுக்குநாள் சிக்கலாகிக்கொண்டே போகிறது.

பிரதமரும் - ஜனாதிபதியும் சட்ட ரீதியிலும், தந்திரோபாய ரீதியிலும், தத்தம் நிலையைப் பலப்படுத்தி, மற்றவரின் நிலையை நெருக்கடிக்குள்ளாக்கத் தமது அரசியல் சாதுரியங்களை பயன்படுத்த முனைவது பகிரங்கமான விடயம்.

இன்றைய இந்த இரு தரப்பினருக்குமிடையேயான அரசியல் யுத்தமானது, வெளியே பார்ப்பதற்கு ஒருவரையொருவர் குற்றவாளியாக்கி தத்தம் நிலைப்பாட்டை நியாயப்படுத்தி, உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் தமக்கான ஆதரவுத்தளத்தை வலுவாக்கிக்கொள்வதற்கும், அதன் மூலம் தேசிய அரசியலில், அடுத்து ஏற்படக்கூடிய நெருக்கடிகளையோ, மாற்றங்களையோ வலுவுடன் எதிர்கொள்வதற்கும் உரிய நகர்வுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றபோதிலும், உண்மையில் இந்த யுத்தத்தின் பின்னணித்தளம் பல்வேறுபட்ட அழுத்தங்களைக் கொண்டதாகும்.

இத்தகைய அழுத்தங்களை அரசுக்கும், ஜனாதிபதிக்கும் வழங்கிக்கொண்டிருக்கும் சக்திகள் உள்ளகத்தில் மட்டுமல்ல, அதற்கு அப்பால், பரந்து விரிந்த வெளியகத்திலும் நிலைகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாரோ ஆட்டுவிக்கிறார்கள்.... இவர்கள் ஆடுகிறார்கள். இந்த அரசியல் பொம்மலாட்டம் சிறிலங்காவின் எதிர்காலம் குறித்த சந்தேகங்களை உறுதி செய்வதாகவேயுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவில் இருந்த போது, மேற்கொள்ளப்பட்ட ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகளால் ரணில் அதிகம் பதட்டம் கொண்டவராகத் தெரியவில்லை. அவர் இதை எதிர்பார்த்துக் காத்திருந்தவர் போல சாவகாசமாகத் தனது நடவடிக்கைகளை நிதானமாக நகர்த்திவருவது, சந்திரிகா எதிர்பார்க்காத ஒன்றே ஆகும்.

இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பாக, புலிகள் கையளித்த திட்டவரைபு குறித்து, அரசு ஒரு முடிவைத் தெரிவிக்கவேண்டிய நிலையில், அது குறித்த பேச்சுக்களைத் தொடரவேண்டிய நிலை ரணிலுக்கு ஏற்பட்டிருந்த வேளையில், சந்திரிகா மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை, ரணிலைத் தற்காலிகமாக ஒரு நெருக்கடிக்குள் இருந்து தப்பி, அதற்குள் சந்திரிகாவைச் சிக்கவைக்க உதவியுள்ளது என்றே கூறவேண்டும்.

புலிகளின் திட்டவரைபினை பேரினவாத சக்திகளும், ஜனாதிபதியும் கடுமையாக எதிர்த்த வேளையில், அது குறித்து ஏதாவது ஒரு முடிவினை சமாதான நகர்வுகளுக்குப் பாதகமின்றி தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் புறக்கணிக்காது, புலிகள் ஏற்றுக்கொள்ளும் வகையில், எடுக்கவேண்டிய நிலையை ரணில் எதிர்கொள்ள வேண்டிய நிலையில், சந்திரிகா மேற்கொண்ட நடவடிக்கைகள், ரணிலுக்கு சாதகமானதாக... அவரின் எதிர்கால அரசியலுக்கு வலுவேற்றுவதாக அமைந்துள்ளது என்றே ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சும், ஊடகத்துறை அமைச்சும் பறிக்கப்பட்ட நிலையில், அதிகாரங்கள் எதுவுமற்ற அரசால் சமாதான நகர்வுகளை முன்னெடுத்து நகர்த்த முடியாது எனவும், ஜனாதிபதியே அதனை மேற்கொள்ளவேண்டும் எனவும், அதற்குத் தான் வெளியே இருந்து ஆதரவு தருவதாகவும், ரணில் சர்வதேச இராஜதந்திரிகள் மத்தியில் வைத்து சந்திரிகாவுக்கு வேண்டுகோள் விடுத்தது சந்திரிகா எதிர்பார்க்காத ஒன்றேயாகும்.

ரணில் வெகுநுட்பமாக, தன்னில் பிழை கண்டுபிடிக்க முடியாத வகையில் சமாதானப் பந்தை சந்திரிகா கையில் திணித்துவிட்டுள்ளார்.

சந்திரிகாவோ, ரணிலும் அவரது அரசும் சமாதான முயற்சிகளைத் தொடரலாம் என்றும், அதற்கான வழிகாட்டலைத் தான் வழங்குவதாகவும் பதிலுக்கு கூறினாலும் ரணில அதனை ஏற்கப்போவதில்லை.

ரணிலை ஏற்கச்செய்வதனால், பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும், ரணில் அரசிடம் கையளிக்கவேண்டும்.


சந்திரிகா அதைச் செய்தால் பெருத்த அரசியல் தோல்வியைச் சந்தித்தவராவார்.

எப்படிப் பார்த்தாலும், ரணில் சாதுரியமாகத்தான் தனது காயை நகர்த்திவருகிறார் போற் தெரிகிறது.

இப்போது சமாதானப் பந்து சந்திரிகாவின் கைக்குள் திணிக்கப்பட்டுவிட்டது. அவர் அதைக் கீழே போட்டுவிடுவாரா அல்லது ரணிலின் கைகளில் ஏதோ ஒரு வகையில் திணிக்க முயல்வாரா?

அந்தப் பந்தையே குழப்பும் கேள்வி இதுதான்!

## நாடும் நடப்பும்




# போக்குவரத்துத் திணைக்கள நடமாடும் சேவையினால் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்தனர்

### மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

நாலாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் - அண்மையில் நடைபெற்ற, மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள நடமாடும் சேவைமூலம் பயன்பெற்றுள்ளதாக, யாழ். மாவட்ட போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்தார்.

இச்சேவை வெற்றிகரமாக முடிவடைவதற்கு மக்களின் ஒத்துழைப்பும், கொழும்பிலிருந்து வருகை தந்த அதிகாரிகளின் சேவை மனப்பாங்குமே காரணமாகும்.

கடந்த மாதம் 31 ஆம் திகதியும் இம்மாதம் 1 ஆம், 2 ஆம் திகதிகளிலும் நடைபெற்ற இந்த நடமாடும் சேவைமூலம், ஆவணங்கள் அற்ற 693 மோட்டார் சைக்கிள்களும், 38 உழவு இயந்திரங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றுக்குரிய இலக்கங்களும் உடனேயே வழங்கப்பட்டன. இவை தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படவுள்ளன.

ஆவணங்களற்ற வாகனங்களின் உடமை மாற்றல் தொடர்பாக, 420 வாகனங்கள் உடமைமாற்றம் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே தமது வாகனங்களுக்குரிய பதிவுகளை மேற்கொண்டு - வாகன இலக்கத்தகடு, பதிவுப் புத்தகம், வாகன அடையாள அட்டை கிடைக்காதோர், தமது முறைப்பாடுகளையும் இந்த நடமாடும் சேவையின்போது தெரிவித்துள்ளனர்.

இத்தகைய 1110 பேருடைய முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதன்போது, கொழும்பிலிருந்து மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரினால் எடுத்து வரப்பட்ட ஆவணங்களில், ஒரு தொகுதி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன. ஏனையவை பதிவுத்தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மோட்டார் வாகனங்களைப் பரிசோதிப்பது தொடர்பாக- 1116 வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டு, அவற்றுக்குரிய சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

சாரதி அனுமதிப்பத்திர விடயம் தொடர்பாக, உரிய அட்டை கிடைக்காத 1008 பேர் - தமது முறைப்பாடுகளை நடமாடும் சேவையின்போது தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட 524 சாரதி அனுமதி அட்டையில் - 144 பேருக்கு நடமாடும் சேவையின்போது வழங்கப்பட்டன. ஏனையவை, பதிவுத் தபாலில் உரியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நடமாடும் சேவையை முன்னிட்டு நடத்தப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கலுக்கான செய்முறைப் பரீட்சைக்கு, 1082 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும், 679 பேரே சமுகமளித்திருந்தனர்.

இவர்களில் 630 பேர் - செய்முறைப் பரீட்சையில் சித்தியடைந்து, தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளனர்.நடமாடும் சேவையின் 890 வாகன இலக்கத்தகடுகளும் விநியோகிக்கப்பட்டன.

பல ஆண்டுகளுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டு, இதுவரை பதிவு செய்யப்படாத வாகனங்களைப் பதிவுசெய்த உரிமையாளர்கள், வரி அனுமதிப்பத்திரத்தை இந்த வருடத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.யாழ்ப்பாணத்தில் முன்னர் பல்வேறு திணைக்களங்கள் நடத்திய நடமாடும் சேவைகளோடு ஒப்பிடுகையில், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் நடமாடும் சேவை - மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

# சிசு உதான பரிசுப் பொருட்கள் மக்கள் வங்கியில் மீதமாகவுள்ளது

மக்கள் வங்கியில் சிசு உதான கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படவென அனுப்பிவைக்கப்பட்ட பரிசுப் பொருட்களில், பெரும்பாலானவை தேங்கிக்கிடப்பதாக வடபிராந்திய மக்கள் வங்கி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

மாணவர்களுக்கென விசேடமாக உருவாக்கப்பட்ட சேமிப்புக் கணக்கே "சிசு உதான" ஆகும். இதில் வைப்பில் இடும் தொகைகளுக்கேற்ப பல பரிசுப்பொருட்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. இவ்வாறு வழங்குவதற்கென அனுப்பி வைக்கப்பட்ட தொப்பிகள் 2800, குடைகள் 1250, பாடசாலைப் பைகள் 720, வோக்மன் றேடியோக்கள் 800 ஆங்கில அகராதிகள் 170 ஆகிய பொருட்களே இன்னும் வழங்கப்படாது மீதியாக உள்ளன. கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுள் - அநேகமானோர் இப்பரிசுகளை இதுவரை பெறவில்லை எனவும், புதிய கணக்குக்களை ஆரம்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாகவும், இதனாலேயே இப்பரிசுப்பொருட்கள் தேங்கியுள்ளதர்கவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# புதிய பிரதம தபாலகக் கட்டடம் அடுத்த மாதம் திறந்து வைக்கப்படும்

### ஊடக அமைச்சு நிகழ்ச்சிநிரலில் தெரிவிப்பு

அடுத்த மாதம் 23 ஆம் திகதி யாழ்.பிரதம தபாலகம் உட்பட, மூன்று தபால் நிலையங்கள் யாழ்.மாவட்டத்தில் திறந்து வைக்கப்படவுள்ளன.

இதற்கான நிகழ்ச்சிநிரலை இலங்கையின் ஊடகத்துறை அமைச்சகம் - யாழ். பிரதம அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளது. இதற்கமைய, எதிர்வரும் டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி யாழ். பிரதம தபாலகமும், சாவகச்சேரி உபதபாலகமும், காரைநகர் உபதபாலகம் ஆகிய மூன்று தபாலகங்களுமே திறந்து வைக்கப்படவுள்ளன.

சுமார் 13 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்தத் தபாலகங்களை - ஊடகத்துறை அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளே திறந்து வைக்கவுள்ளார்கள். திறப்பு விழாவிற்கு வரவுள்ள அதிகாரிகள் பற்றிய விபரங்களைப் பின்னர் அறிவிக்கவுள்ளதாகவும், அந்த அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதம தபாலகம் பிரமாண்டமானதாக அமைக்கப்பட்டுள்ளதோடு - தபால் திணைக்களம், அஞ்சல் சேவை, அஞ்சல் நிர்வாக வேலைகள் உட்படப் பல வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் மையமாகவும் இது விளங்கவுள்ளதாகவும்,

சாவகச்சேரி, காரைநகர்ப்பகுதிகளில் அஞ்சல் சேவைகளை மேற்கொள்வதில் இதுவரை இருந்து வந்த இடர்ப்பாடுகள்-இந்த உபதபால் நிலையங்கள் திறந்துவைக்கப்படுவதன் மூலம் தீரவாய்ப்பிருப்பதாகவும், யாழ். பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் சம்பந்தர் சிவாராஜசிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை, தபால் நிலையங்கள் சிலவற்றைப் புனரமைப்பதற்கு ஊடகத்துறை அமைச்சின் மூலம், குறிப்பிட்ட தொகை நிதி உதவி கிடைக்கவுள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.(ப)

# சமாதானத்தைக் குழப்பும் சக்திகள் சிங்கள மக்களாலும் நிராகரிக்கப்படுவர்

ஜனாதிபதி சந்திரிகா - ரணில் விக்கிரம சிங்கவின் அமைச்சரவையின் கீழிருந்து 3 அமைச்சுக்களைப் பறித்துள்ளதையடுத்து, சிங்கள மக்கள் மத்தியிலும், உலக நாடுகள் மத்தியிலும் கடுமையான கண்டனம் அவருக்கெதிராக எழுந்தது. இதனால், ஜனாதிபதி சந்திரிகா சற்றும் மிரண்டுபோகாமல், அதன் பின் அவர் அறிவித்த அவசரகாலச்சட்டம் - தன்னால் அறிவிக்கப்படவில்லையே என தொப்பியைப் புரட்டினார்.

இதற்குக் கண்டனங்கள், அடிப்படைக் காரணம், தனக்கிருக்கும் செல்வாக்கு எத்தகையது என்பதைப் புரிந்துகொண்ட ஜனாதிபதி சந்திரிகா - பறித்துக்கொண்ட அமைச்சுக்களைத் திருப்பியளிக்காது, பிரதமர் ரணில் சமாதானத்தைத் தொடரலாம் என்றும், நோர்வே அனுசரணையாளரும், கண்காணிப்புக்குழுவினரும் தனது கட்டுப்பாடுகளை ஏற்கவேண்டும் எனக் கூறினார். இதற்கடுத்த கட்டமாகத் தாமும், பிரதமர் ரணிலும் இணைந்து, தேசிய அரசை அமைக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார். ரணில் அரசைத் தான் கலைக்கப்போவதில்லை எனவும் அவர் கூறினார்.

ரணில் அரசைக் கலைக்கும் ஒரு ஒத்திகையே, அமைச்சுக்களைச் சந்திரிகா கைப்பற்றியதாகும். சந்திரிகாவின் ஒத்திகையே ஒரு கலவரத்தை உண்டாக்கிய சூழலில், அவர் சமரசத்துக்கு இறங்கத் தொடங்கினார். இந்த சமரசத்தில் அவர் 3 அமைச்சுக்களை விடத் தயாராக இருக்கவில்லை. ஆட்சியைக் கலைத்தால், தான் மீள ஆட்சியேற்பது சாத்தியமற்றது என் பதை அவர் தெளிவாகப் புரிந்துகொண்டார்.

இதனாலேயே ரணில் அரசைக் கலைக்கமாட்டேன் என சந்திரிகா உறுதிபடத் தெரிவித்தார்.

சமாதான நடவடிக்கைகளின் முன்னகர்வுக்குப் படைகளின் பங்களிப்பே பிரதான காரணியாகும். பாதுகாப்பு அமைச்சை சந்திரிகா கையில் வைத்துக்கொண்டு, ரணில் சமாதானத்தை முன்னெடுப்பது சாத்தியமற்றது என்பது, 3 அமைச்சுக்களைச் சந்திரிகா கைப்பற்றியபோதே அப்பட்டமாகத் தெரிந்த உண்மையாகும். அதாவது சந்திரிகா சமாதானத்தைக் குழப்பவே 3 அமைச்சுக்களைத் தன் வசம் எடுத்துக்கொண்டார்.

ஆனால், இப்பொழுது நிலைமைகள் தலைகீழாக மாறிவிட்டன. ஆட்சி கலைக்கப்பட்டால், தான் ஆட்சிக்கு வருவது சாத்தியமில்லை என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்ட சந்திரிகா - ஆட்சிக் கலைப்புப் பற்றிக் கனவிலும் நினைக்கமுடியாத நிலையை எட்டினார். ஆனால், நிலைமைகளை தமக்குச் சாதகமாக்கி, சந்திரிகாவைக் கவிழ்க்க, தேர்தலை சந்தித்து கூடுதல் ஆதரவினைத் திரட்ட ரணில் அரசு தயாராகிவிட்டது.

இதற்காகச் சபாநாயகரின் அதிகாரத்துடன், தமது ஆட்சியைக் கலைப்பதுபற்றி, ரணில் அரசு ஆலோசிக்கின்றது. உண்மையில், இது சந்திரிகாவுக்கு மிகுந்த ஆபத்தான விடயமாகும். ஒரு தேர்தலை அவர் சந்திக்க முடியாது.

ஆனால், ரணில் அரசோ இதனைச் சாதகமாக்க முனைகின்றது. இது சந்திரிகா 3 அமைச்சுக்களையும் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரலை, நிபந்தனையாக்கியிருக்கின்றது. சந்திரிகா 3 அமைச்சுக்களை மீளளிப்பதானது, அவருக்கு அவமானகரமானதாகும். ரணிலைப் பொறுத்தவரை சந்திரிகாவின் கையறுநிலையைத் தெளிவாகப் புரிந்துகொண்ட நிலையில், மிரட்டவும், நிபந்தனைகளைத் துணிவாக முன்வைக்கவும், அவரின் கோரல்கலை நிராகரிக்கவும் தொடங்கிவிட்டார். இதன் உச்சமாக சந்திரிகாவே சமாதானத்தைக் கொண்டு நடத்தட்டும் என்ற குண்டினை சந்திரிகாவின் தலையில் போட்டிருக்கிறார். சமாதானத்தை, அதற்கான போர்நிறுத்த உடன்பாட்டை அதிலும் முழுமையான, நிறைவேற்றப்படாத நிலையிலும்கூட அதனை கடுமையாக எதிர்த்து வருபவர் சந்திரிகா. அவரால் இப்போது சமாதானத்தை முன்னெடுக்க முடியாது. அவரைப் பொறுத்தவரை ரணில் மேற்கொள்ளும் சமாதானத்தை கண்டனங்களுடன் தடைகளைப் போடாது, அதைப் பார்த்துக் கொண்டிருப்பதைத்தவிர வேறெதையும் மேற்கொள்ள முடியாது.

ஏனெனில், தற்போதைய சமாதானத்துக்காக நோர்வேயின் முன்னெடுப்புகளை ஆரம்பத்திலேயே நிராகரித்தவர் சந்திரிகா. சமாதானத்தின்பேரில் கொடுமையான போரை வேண்டுமானால் அவர் மேற்கொள்வார். சந்திரிகா 1994 ஆம் ஆண்டுக் கடைசி முதல் 1995 ஆம் ஆண்டு முற்பகுதிவரை மேற்கொண்ட பொருளாதாரத்தடை, போக்குவரவுக் கட்டுப்பாடுகள் நீக்கப்படாத சூழலில் மேற்கொண்டது போன்ற போலிச் சமாதானத்தையே அவரால் நடத்த முடியும். ஏனெனில், இன்றும் இவர் விடுதலைப்புலிகளைச் சமாதானத்திற்கான அவர்களின் நேர்மையை, நம்பத்தயாராக இல்லை. அப்படிப்பட்டவரால் எப்படி சமாதானத்தை முன்னெடுக்கமுடியும். கடற்படையைக் கொண்டு சமாதானத்தைக் குழப்பமுயன்ற - முயலும் - அவரால் இது சாத்தியமற்றது என்று தெரிந்தே, ரணில் விக்கிரமசிங்க சமாதானத்தை முன்னெடுக்க பாதுகாப்பு அமைச்சு தேவை. இல்லையெனில், அவர் சமாதானத்தை முன்னெடுக்கட்டும் என மிரட்டுகிறார். அதேவேளை ஒருபடி மேலே போய், சமாதானத்தில் தொடர்புடைய நாடுகளிடமும் அவர் இதனைத் தெரிவிக்கத் தொடங்கி விட்டார். இது சந்திரிகாவை மேலும் நெருக்கடிகளுக்குத் தள்ளியுள்ளது.

இந்தச் சூழலில் விடுதலைப்புலிகளுக்கும்-ரணில் அரசுக்கும் இடையிலான போர்நிறுத்த உடன்பாடு, அரசியல் யாப்புக்கு முரணானது. அதனை கலைக்கும் அதிகாரம் தனக்கு உள்ளது என கடைசி ஆயுதத்தை சந்திரிகா போட்டுள்ளார். யாப்புக்கு அது முரணானது எனில் இதுவரை அதனை அவர் ஏன் அனுபவித்தார் என்ற கேள்விக்கு சமாளிப்புப் பதிலை அளித்துள்ளார்.

அரசியல் யாப்புக்கு முரணான - போர்நிறுத்த உடன்பாட்டை சந்திரிகா நிராகரித்தால் அவர் ஆரம்ப நிலையிலிருந்தே நிராகரிக்கப்படுவார் என்பதே உண்மையாகும். சமாதானத்தின் பெறுபேறுகளை 20 மாதங்களாக ருசித்த சிங்கள மக்களுக்கு - போர்நிறுத்த


**தி.தவபாலன்**

உடன்பாட்டை அச்சுறுத்தும் சந்திரிகாவின் மிரட்டல் விருப்புடையதாக இருக்காது.

சமாதானத்தை குழப்புவதற்காக சந்திரிகா மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகள் பெரும் நெருக்கடிகளை அரசியலில் ஏற்படுத்தியுள்ளதுடன், அவருக்கும் ஏற்படுத்தியுள்ளது. எதிர்பார்ப்புக்களை மீறிச் செல்லும் சிறிலங்கா அரசியலில் அடுத்து என்ன நடக்கும் என்பதை கணிப்பிடப்பட முடியாததாக உள்ளது.

ஆனால், சமாதானத்தை குழப்பும் சக்தி சிங்கள மக்களாலும், வாக்களிக்கும் தகுதிபெற்ற இலங்கை மக்களாலும் தூக்கியெறியப்படும் என்பது அசைக்கப்பட முடியாத முற்கூறாகும்.

# நெடுந்தீவின் நீர்ப்பயன்பாட்டுக்கு அவசியமான பெட்டுக்கறிக்குளம்



நெடுந்தீவு மத்திய பகுதியில் அமைந்துள்ள பெட்டுக்கறிக்குளம் பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருப்பதனால், தூர்வடைந்து அதன் ஆழம் குறைந்துகொண்டு வருகின்றது. இதன் காரணமாக இந்தக் குளத்தில் தேக்கப்படும் மழைநீரின் அளவு குறைவடைந்து செல்வதுடன், மழைநீரும் கடலுக்குள் செல்கின்றது.

நெடுந்தீவிலுள்ள குளங்களில் பெட்டுக்கறிக்குளமே பெரியதாகும். இதிலிருந்து நீரினை வெளியேற்றக் கூடியவாறு கால்வாயும் கடலுடன் இணைக்கப்பட்டு, கட்டுப்பாட்டு கதவுகளும் ஆரம்பத்தில் பொருத்தப்பட்டிருந்தது.

இந்தக் குளத்தில் ஆரம்பகாலத்தில் நல்ல நீர் தேங்கி நின்றமையால், குளத்தை அண்டிய பகுதியிலுள்ள காணிகளில் சிறு தானியங்களும், ஊடுபயிர்களும் செய்கை பண்ணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் இந்தக் குளத்து நீரினை நம்பியே, பல குடும்பங்கள் கால்நடைகளையும் வளர்த்து, அதன்மூலம் கூடிய வருமானங்களையும் பெற்று வந்துள்ளனர்.

ஆனால், தற்போது இந்தக் குளம் போதிய பராமரிப்பு இன்மையால் மக்களின் தேவைகளை சிறிதளவேனும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அமையாததுடன், பெரும் தீமைகளையும் ஏற்படுத்தி வருகிறது. இந்தக் குளத்தினது ஆழம் குறைவடைந்துள்ளதுடன், நீரும் உவர் நிறைந்ததாக மாறியுள்ளது. இந்தக் குளத்தில் நீர்மட்டம் உயரும் வேளையில், நீரைக் கடலுக்குள் கட்டுப்படுத்திப் பாய்ச்சுவதற்காக அமைக்கப்பட்ட கட்டுப்பாட்டு கதவுகளும், அணையும் சேதமடைந்துள்ளதால், குளத்து நீர் கடலுக்கும், கடல் நீர் குளத்திற்கும் மாறி மாறி கடத்தப்படுகின்றது. இதனால் நீரின் தன்மையும் கெட்டுவிட்டது.

இவைகள் ஒரு புறத்தில் இருக்க, குளத்தின் நீர் மட்டம் குறைவாக இருப்பதனால் வருடத்தின் நடுப்பகுதியில் கடும் வறட்சியின் காரணமாகக் குளம் முற்றாகவற்றிச் சீரற்ற ஒரு கட்டாந்தரையாக காட்சிதரும். இந்த வேளையில் உவர் நீரினால் மாற்றம் பெற்ற குளத்திலுள்ள மண் உவர்ப்புழுதியாகி கடும் காற்று வீசும்காலங்களில் 'புழுதிப்புயல்' போன்று வீசத்தொடங்கும்.

குளத்தினது வடபகுதியிலே பிரதான வீதியும் அதனை அண்டிய பகுதியில் எழுபத்தைந்திற்கு மேற்பட்ட குடும்பங்களும் வசித்து வருகின்றதுடன், அந்தப் பகுதியில் கனிஷ்டதரப் பாடசாலை ஒன்றும் அமைந்துள்ளது.



புழுதிப்புயல் வீசுகின்ற காலத்தில் அந்தப் பகுதியில் உள்ள பயன்தரு மரங்கள் எல்லாம் உவர்த்தன்மையால் கருகி நாசமாகிவிடுவதுடன் இக்காலத்தில் அப்பகுதி மக்கள் தங்களது உறவினர் வீடுகளில் சென்று வசிக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படுகின்றது. அத்துடன், பெருமளவிலான கால் நடைகளும் தாகம்தீர்க்க குளத்தை நாடிச்சென்று, அங்கு நீரின்மையால் குளப்பகுதியிலேயே இறந்து போகிறது.


இந்தக் குளம் பிரதானவீதியை அண்டி இருப்பதால், அவ்வீதியூடாக மக்கள் பயணிப்பதும், பெரும் சிரமமான காரியமாகவே இக்காலப்பகுதி இருப்பதுடன், அப்பகுதியில் உள்ள பாடசாலையைக்கூட சீராக நடாத்த முடியாதநிலையும், ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.

இத்தனை துன்பங்களுக்கு மத்தியில் அப்பகுதி மக்கள் மட்டுமன்றி, தீவின் அனைத்துப் பகுதி மக்களும் இக்குளத்தினது பராமரிப்பின்மையால், காலங்காலமாகப் பெரும் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

காலங்காலமாக இக்குளத்தைப் புனரமைக்குமாறு உரிய அதிகாரிகளையும், அரச சார்பற்ற வெளிநாட்டு நிறுவனங்களையும் வேண்டிக்கொண்டு வந்துள்ளனர். இத்தனைக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், உலக வங்கியின் நிதி உதவியுடன் இக்குளம் புனரமைக்கப்படவுள்ள செய்தி தற்போது மக்கள் செவிகளில் தேனாகப் பாய்ந்துள்ளது.

30 லட்சம் ரூபா செலவில் உலக வங்கி நிதியுதவியுடன் இந்தக்குளம் அடுத்த வருடம் புனரமைக்கப்படவுள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில், கடந்த மாதம் யாழ்ப்பாணம் நீர்ப்பாசனத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் நெடுந்தீவுக்கு வந்து தங்கிநின்று, ஒரு வாரகாலமாக மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத் திட்டங்கள், குளத்தினது விஸ்தீரணம் போன்றவற்றை ஆராய்ந்து சென்று, உலக வங்கிக்கு வேலைத்திட்ட அறிக்கை சமர்ப்பிக்க உள்ளனர்.

இந்த நடவடிக்கை அடுத்த வருடம் செயற்படுத்தப்படுமாயின், நெடுந்தீவில் காலத்திற்குக் காலம் தன்மைமாறும் குடிநீரின் தன்மைகூட சீராகலாமென எதிர்பார்க்கப்படுவதுடன், கடலுக்கும் இதற்குமான தொடர்பினை துண்டிப்பதுடன், இக்குளத்தினது தற்போதைய உவர்த்தன்மை காலப்போக்கில் மாற்றிக் கொள்ள கூடியதாகவும் இருக்கும். எனவே இத் திட்டத்தின், மூலம் குளத்தை அண்டியபகுதிமக்கள் மட்டுமன்றி, நெடுந்தீவுமக்கள் அனைவருமே நன்மையைப் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.



**கண்ணன்**

# சூடானில் சனநெரிசலில் சிக்கி 31 பேர் பலி; 48 பேர் படுகாயம்!

சூடானில் கடந்த சனிக்கிழமை முஸ்லிம்களின் புனித மாதமான ரமழானை முன்னிட்டு தொண்டு ஸ்தாபனமொன்று வழங்கிய நன்கொடைகளைப் பெறுவதற்காகக் காத்திருந்த கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலால் 31 பேர்வரை கொல்லப்பட்டும், 48 பேர் காயமடைந்துமுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சூடானிய பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் இந்த நெரிசலில் 15 பெண்களும், 12 சிறுவர்களும், 4 ஆண்களும் மூச்சுத்திணறி இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் சூடானின் துறைமுகத்தைச் சார்ந்த பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது. இப்பிரதேசம் சூடானின் மிகவும் பின்தங்கிய பகுதியெனத் தெரிவிக்கப்படுகிறது.

# சவூதியின் ஆட்சியிலுள்ள மன்னரை பதவி நீக்க அல் - கொய்டா முயற்சி!

## அமெரிக்க பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஆர்மிரேஜ்

அல் - கொய்டா அமைப்பு சவூதியில் ஆட்சியிலுள்ள மன்னரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு முயற்சிகள் செய்துவருவதாக அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை றியாட்டிற்கு விஜயம் செய்த இராஜாங்க அமைச்சர் ஆர்மிரேஜ் மேலும் இதேபோன்ற தாக்குதல்களை எதிர்பார்க்கலாம் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான தாக்குதல்களைத் தடுப்பது இலகுவானதல்ல என, றியாட்டின் முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரியும், தற்போதைய பிரித்தானியாவுக்கான தூதுவருமாகிய ரேக்கி அல் பைசால் தெரிவிததார்.

மேலும், அமெரிக்கா மீது அதிகளவில் சவூதி அரேபியா சார்ந்திருப்பதே அல் - கொய்டாவின் தாக்குதல்களுக்கு காரணமெனவும் தெரிவிக்கப்படுகிறது.



# மியான்மரின் எதிர்க்கட்சி தலைவி தொடர்ந்தும் வீட்டுக்காவலில்!

## ஐ.நா மனித உரிமை அதிகாரி தெரிவிப்பு



மியான்மாரின் எதிர்க்கட்சித்தலைவி ஆங்சான் சூகி தொடர்ந்தும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், வெளித்தொடர்புகள் எதுவுமின்றி தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அண்மையில் அவரது இருப்பிடத்துக்கு விஜயம்செய்த ஐ.நா. மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த அதிகாரி போலோ பின்கெய்ரோ தெரிவித்துள்ளார்.

தொலைபேசி வசதிகள் எதுவுமின்றி மிகுந்த பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு மத்தியில் வசிப்பதாகவும் தனது ஆதரவாளர்கள் விடுவிக்கப்படும்வரை தனக்கு அளிக்கப்படும் எதுவித சலுகைகளையும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனவும், ஆங்சான் சூகி தெரிவித்துள்ளார்.

13,000 இற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் மியான்மார் தடுப்புமுகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் - அவர்களுக்கு அடிப்படை உரிமைகள்கூட மறுக்கப்பட்டுள்ளதாகவும், ஐ.நா. அதிகாரி தெரிவித்துள்ளார்.

# ஆர்.பி.ஜி தாக்குதலினால் அமெரிக்கச் சிப்பாய் பலி!

பாக்தாத்தின் தென்பகுதியில் ஆர்.பி.ஜி. தாக்குதலில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் 18 ஆவது இராணுவ பொலிஸ் படைப்பிரிவைச் சேர்ந்தவர் என, அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மே மாத்தில் இருந்து ஈராக்கில் கொல்லப்பட்ட அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கை 151 ஆக உயர்ந்துள்ளது.



இஸ்ரேலியரால் மேற்குக்கரைப் பகுதியில் அமைக்கப்பட்ட தடுப்புச் சுவரில் பலஸ்தீனிய ஆதரவாளர் பலஸ்தீனக் கொடியை ஏற்றுவதைப் படத்தில் காணலாம்.

# அரபாத்தின் ஆதரவாளரான ககம்பாலாவி உள்துறை அமைச்சராகத் தெரிவாகினார்!



உள்நாட்டு அமைச்சர் ஒருவரை தோந்தெடுப்பதில் அரபாத்திற்கும் பிரதம மந்திரி அகமட் கூரேய்க்கும் இடையே ஏற்பட்டிருந்த அதிகாரப் போட்டியில், பலஸ்தீனத் தலைவர் அரபாத் வென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜசீர் அரபாத்தின் ஆதரவாளரான ககம்பாலாவி அப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே அமெரிக்காவும், இஸ்ரேலும் ஜசீர் அரபாத்தின் தேர்வினால் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளன.

நாடாளுமன்றத்தை விரைவில் கூட்டுவதற்குள்ளதாக பிரதமர் கூரே தெரிவித்துள்ளார்.

இதனிடையே பிரதமரே பாதுகாப்பு படையின் அதிகாரங்களை வைத்திருக்க வேண்டும் என, அமெரிக்க இராஜாங்க அமைச்சின் பேச்சாளர் அமன்டா பாத் தெரிவித்துள்ளார்.

## உலக நோக்கு

# ஈராக்கின் ஆளும் கவுன்சிலை புஷ்ஷிற்கு பிடிக்கவில்லையாம்!

## 'வோஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகை தெரிவிப்பு



(வோஷிங்ரன்)

அமெரிக்க அதிபர் ஜோஜ் புஷ் ஈராக்கில் உள்ள ஆளும் கவுன்சிலை தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரியான முறையில் அச்சபை எதுவித தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை என, வாஷிங்ரன் போஸ்ட் என்ற பத்திரிக்கை தெரிவித்துள்ளது.

இதனால், மாற்று வழியொன்றை விரைவில் முன்வைப்பதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

ஈராக்கில் ஆளும் கவுன்சிலில் கூடுதலானவர்கள் ஈராக்கிய பிரஜைகளாகும் என, பென்ரகன் ஆலோசகர் ரிச்சாட் பேர்லி தெரிவித்துள்ளார்.

சுனி,'சியா முஸ்லிம்கள் அல்லது குர்திஷ் இனத்தைச் சேர்ந்தவர்கள் இச் சபையில் அங்கம் வகிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச ஒத்துழைப்புக்களை பெறுவதாயின் சில மாற்றங்களை இச் சபையில் உருவாக்கவேண்டும் என, அமெரிக்க செனட்டர் ஜோ பிடென் தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஆப்கானிஸ்தானில் உள்ளது போன்று இடைக்கால தன்னாட்சி மிக்க அமைப்பொன்றை உருவாக்குவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான அமைப்பொன்றை பிரான்ஸ் நீண்டகாலமாக ஈராக்கில் அமைக்க வேண்டும் என வற்புறுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஊர்சுற்றி எழுதுவது

ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் அம்மா நிற்க வேண்டியதாகிவிட்டதேயென்றார் நண்பர்.

'ஏன் அப்படிச் சொல்கிறீர்?' என்றேன்.

பிரதமர் அமெரிக்காவில் நின்ற சமயத்தில் மூன்று அமைச்சர்களைப் பதவிநீக்கம் செய்து, அந்தப் பொறுப்புக்களைத் தாம் எடுத்து நாடாளுமன்றக் கூட்டத்தையும் இரு வாரங்களுக்கு ஒத்திவைத்து, பிரதமர் திரும்புவதற்கிடையில் ஆளும் கட்சியிலிருந்தும், அதற்கு ஆதரவானவர்கள் சிலரையும் ஆசைகாட்டி, தன்பக்கம் வளைத்துப் போடலாம் என்று நினைத்தார்.

அது நடக்காதது மட்டுமல்ல, 225 உறுப்பினர்களையும் கொண்ட நாடாளுமன்றத்தில் 113 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது ஐக்கிய தேசிய (கட்சி) முன்னணி, ஒரு வாக்குத்தான் அதிகப்படியாக வைத்திருந்தது.

'அம்மா எடுத்த நடவடிக்கை, இப்போது 130 உறுப்பினர்கள் ரணில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை தெரிவித்துக் கையெழுத்துப் போட்டே கொடுத்திருக்கிறார்கள்' என்றார் நண்பர்.

அம்மா எதிர்பார்த்தது நடக்கவில்லை. உல்லாசப் பயணிகளின் வருகையும் திடீரென நின்றது. பங்குச்சந்தையும் சரிந்தது. சமாதானப் பேச்சுக்கள் தொடங்கினால் தான், உதவியளிப்பதாக உறுதியளித்த வெளிநாட்டுப் பணமும் வரும், இல்லையெனில், கிடைக்காது என்று வேறு பயமுறுத்துகிறார்கள் என்றேன்.

'ஆட்சியைக் கவிழ்ப்போம், புதிய ஆட்சியை அமைப்போம், புதிய ஆட்சி அமைக்கத் தயாராக இருக்கிறோம். நாட்டைக் காப்பாற்றுவோம் என்று, வீதி, வீதியாக வீரவசனம் பேசியவர்கள், எல்லோரும் மௌனிகளாகிவிட்டனர்' என்றார்.

'அம்மாவின் ஆட்டத்துக்கெல்லாம் இந்தியா தான் பின்னணியிலிருப்பதாகப் பலரும் கருதினார்கள். இந்தியா தங்களுக்கு ஆதரவாக இருப்பதாக அம்மையாரும், அவரது ஆலோசகர்களும், ஆதரவாளர்களும் ஒரு மாயையை ஏற்படுத்தியிருந்தனர். இப்போது அம்மாவின் அதிரடி நடவடிக்கையை இந்தியாவும் ஆதரிக்கவில்லை யென்பது தெளிவாகிவிட்டது. சமாதான முயற்சிகளைக் கெடுத்துவிடாமல் நடந்துகொள்ளுமாறு அம்மையாருக்கு உறுதிபடக் கூறிவிட்டது.

இதனால்தான் புரிந்துணர்வு ஒப்பந்தமும், போர் நிறுத்தமும், சமாதான முயற்சிகளும் தொடருமென்றும், நாடாளுமன்றம் மீண்டும் 19 ஆம் திகதி கூடும் போது, வரவு - செலவுத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்றும், அம்மையார் கூறியிருக்கிறார். அதுமட்டுமல்ல, தான் எடுத்த அதிரடி நடவடிக்கையால் ஏற்பட்ட குழப்பத்தைச் சமாளிக்கவும் நல்ல பிள்ளைப் பெயர் எடுக்கவும் தேசிய அரசு அமைக்கலாமென்றும் அழைப்பு விடுத்தார். வெளிநாடுகளும் இதை ஆதரிக்குமென்று எதிர்பார்த்தார்'

அம்மாவின் இந்த வலைக்குள் சிக்க ரணில் மறுத்துவிட்டார். மூன்று முக்கிய அமைச்சுக்களும் இல்லாமல் சமாதானப் பேச்சைத் தொடரமுடியாதென்றும், வேண்டுமானால் அம்மாவே சமாதானப் பேச்சைத் தொடரட்டும். 'நாங்கள் வெளியிலிருந்து ஆதரவு தருகிறோம்' என்றும் ரணில் சொல்லிவிட்டார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேச வலைப்பின்னலை பிரதமர் ரணில் தந்திரமாக ஏற்படுத்தியிருப்பதாக சிலர் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இந்த சர்வதேச வலைப் பின்னலில் இப்போது மாட்டிக்கொண்டிருப்பவர் சந்திரிகா அம்மையார்தான் என்றார் நண்பர்.

சமாதான முயற்சிகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கும்படி உலகநாடுகள் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுத்தகாலம் போய் - சமாதானத்தைக் குழப்பும் நடவடிக்கைகளை எடுக்காமல் பிரதமருடன் ஒத்துழைக்கும்படி சந்திரிகா அம்மையாரை உலகநாடுகள் நெருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இதுமட்டுமல்ல, இப்போது புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாதிக்க சபை திட்டவரைபு நியாயமானதுதான் என்றும், இடைக்கால தன்னாதிக்க சபையை விடுத்து, சமஷ்டி அரசியல் ஆட்சி அமைப்பே வழங்கவேண்டுமென்றுகூட கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையான த ஐலன்ட் ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது.

காலம் நான்றாக மாறிவிட்டது. நாடு பிளவுபடப் போகின்றது. பிரிக்கப் பார்க்கிறார்கள் என்று செல்வநாயகம் காலத்தில் ஆரம்பித்த கூச்சல் முடிவுக்கு வருகிறதுபோலும் என்றார் நண்பர்.

பண்டாரநாயக்க குடும்பத்தை தமிழ்மக்கள் வாழ்த்தவேண்டும்!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாரந்தி

சில மாதங்களுக்கு முன்னர், கூட்டணியொன்றை அமைக்க ஜே.வி.பியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய ஜனாதிபதி, ஆளும் ஐ.தே.முன்னணி அரசை பதவியில் இருந்து அகற்றும் நோக்குடனேயே அதனை மேற்கொண்டார் என்பது தெரிந்த விடயமே.

அந்தப் பேச்சுவார்த்தை முடிவு எட்டாமல் முடிந்தபோதிலும், முற்றாக முறிந்து போகவில்லை... தொடர்ந்தும் அதனைத் தொடர்வதற்கான முயற்சிகள் இன்னமும் தொடர்வதாகவே கூறப்பட்டது.

இடையில் சந்திரிகாவின் அதிரடி, அவசர நடவடிக்கையினால் ஏற்படடுள்ள அரசியல் குழப்பத்திற்கு முடிவு கட்டும் தேசிய அரசு ஒன்றை அமைக்க ஐ.தே.முன்னணிக்கும் அழைப்பு விடுத்தமையானது, ஜே.வி.பி யினருக்கு அதிருப்தியையும் ஏமாற்றத்தினையும் அளித்துள்ளதாம்... அதிருக்க... புலிகளுடன் பேசத்தயார் என்றும், ஜனாதிபதி அறிவித்துள்ளமையானது பேரினவாதிகளுக்கு குறிப்பாக சிஹல உறுமய கும்பலுக்கு அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் அளித்துள்ளதாம்...

அதிரடி நடவடிக்கைகளை அம்மையார் மேற்கொண்டபோது ஆடிப் - பாடி- பாராட்டியோர் தொடர்ந்து தம்மைப் புறந்தள்ளும் அதிரடி நடவடிக்கைகளிலும் அம்மணி இறங்கியுள்ளமையால் அடுதது என்ன செய்வது என தெரியாதுள்ளனராம்.

அம்மணியின் அதிகார அரசியல் - அதிகாரமாவே தொடர்ந்தும் நடக்கும் போல் தெரிகிறது.

'உறுமயக்காரரும்... ஜே.வி.பி யினரும் என்ன செய்யப் போகிறார்கள்...?' என்று கேட்டார் ஒரு நண்பர்... முன்பு கண்டியிலிருந்து, கொழும்புக்கு பாதயாத்திரை நடத்தினவை... இனிக் கொழும்பிலிருந்து கண்டிக்கு பாதயாத்திரை மேற்கொண்டு மதபீடங்களைச் சரணடைய வேண்டியது தான் எனப் பதில் சொன்னார் மற்றொரு நண்பர்.

தெருவாசி

## பிரதம நீதியரசருக்கெதிரான குற்றப் பிரேரணையை ஐக்கிய தேசிய முன்னணி வாபஸ்பெற வேண்டும்!

(கொழும்பு)

பிரதம நீதியரசரான சரத் என்.சில்வாவுக்கெதிராக, ஐக்கிய தேசிய முன்னணியால் கொண்டுவரப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணையை வாபஸ் பெறுமாறு, நீதிச்சேவைகள் ஊழியர்கள் தொழிற்சங்கம் அரசிடம் மனுவொன்றைக் கொடுத்துள்ளது.

கொழும்பு உயர்நீதிமன்றப் பதிவாளரான பியரத்ன - முத்துக்குமாரன, நீதிச் சேவைகள் தொழிற்சங்கத்தின் சார்பில் இந்த மனுவினை அரசிடம் கையளித்துள்ளார்.

இந்த கையளிப்புக்கு பின்னர் கருத்துத் தெரிவித்த அவர் - இலங்கையின் நீதியான சட்ட நடவடிக்கைக்கு அரசு உதவவேண்டுமென்றும், பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையொன்று கொண்டுவரப்படுவது இலங்கை வரலாற்றில் இதுதான் முதற் தடவையெனவும்,

எனவே, நீதியரசருக்கு எதிராக கொண்டுவரப்படும் இந்தப் பிரேரணையைத் தாம் எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## மூன்று அமைச்சுக்களைப்...

ட்ரைகேவ் ரெலவ்சன்-புலிகளின் கப்பலைத்தேடி கடற்படை நகர்வது தொடர்பான தகவலை அவர்களுக்கு வழங்கியதைத் தேசத்துரோக செயலாகவே நான் காண்கிறேன்.

நாடு இவ்வாறான பயங்கரமான சூழ்நிலைக்குள் சென்றதால் தான், ஜனாதிபதி சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை அமைச்சுக்களைப் பொறுப்பேற்றார்.

இத்தகையதொரு சூழ்நிலையில் அமைச்சுக்களின் பொறுப்புக்களை ஜனாதிபதி சந்திரிகா கைப்பற்றியதை ஒரு துணிச்சலான செயலாகவே நான் காண்கிறேன். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை சமாதான முன்னெடுப்புகளை பாதிக்காது என நம்புகிறேன். என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நாடாளுமன்றத்தை மீண்டும்...

நிறுத்தியிருந்த நிலையில் நாடாளுமன்ற விவகாரத்தை அவரே கையாள வேண்டுமென்று சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

அத்துடன், இவ்வாறு நாடாளுமன்றக் கூட்டம் கூட்டப்பட்டால், அது சட்டபூர்வமற்றதாகவும், அரசியலமைப்புக்கு முரண்பட்டதாகவும் இருக்குமென்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் - கட்சித் தலைவர்களின் கையொப்பத்துடன் கூடிய நாடாளுமன்றைக் கூட்டுவதற்கான கோரிக்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

ஐ.தே.கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் கரு ஜெயசூரிய, டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார, மகிந்த சமரசிங்க, ஏ.எச்.எம்.அஸ்வர், எம்.எச். முகமட் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், இ.தொ.கா தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான், மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பிரதியமைச்சருமான சந்திரசேகரன், தமிழ்க் காங்கிரஸ் சார்பில் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் இரா. சம்பந்தன் ஆகியோர் இந்தக் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தை - பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி மற்றும் ஈ.பி.டி.பி ஆகியன புறக்கணித்தன. நாடாளுமன்றக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் - குழுத் தலைவர்களின் கூட்டத்தினைக் கூட்டுவதற்கு சபாநாயகருக்கு அதிகாரமில்லை என்று தெரிவித்தே, இந்தக் கூட்டத்தை இக்கட்சிகள் புறக்கணித்தமை குறிப்பிடத்தக்கது.

### நாட்டின் நன்மையைக் கருதி

# பிரதமர் ரணிலுடன் ஜனாதிபதி இணைந்து செயற்படவேண்டும்

## இந்திய வெளியுறவுச் செயலாளர் தெரிவிப்பு

(புதுடெல்கி)

இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு நாட்டின் எதிர்கால நன்மைகருதி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படுமாறு இந்தியா கேட்டுள்ளது.

நேற்றையதினம் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின்போது இந்திய வெளியுறவு அமைச் சின் செயலாளர் கன்வல் சிபால் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதுடன்-

இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை தொடர்பாகவும், இந்தியாவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

அரசினதும், எதிர்க்கட்சிகளினதும் சமாதானத்தின் முன்னேற்றமே சிங்கள மக்களது சாத்தியமான ஒற்றுமைக்கு வழிவகுக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### சுகயீனம் காரணமாக போராளி சாவு

சுகயீனம் காரணமாக கடந்த வியாழனன்று போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

2 ஆம் லெப்.அதியமான் என்று அழைக்கப்படும் சிவன் கோவிலடி சாவகச்சேரியை சொந்த முகவரியாகவும், உமையாள்புரம் பரந்தனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அருள்தாஸ் என்ற போராளியே சாவடைந்தவராவார்.

## புலிகளுடன்...

யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய சமாதான முயற்சிகளை ஜனாதிபதியே தொடக்கினார். அதனை முன்னெடுத்துச் செல்வது அவருக்கு பலமாக இருக்கும்.

சமாதான முயற்சியை ஏற்பாடு செய்யும் தரப்பாக, நோர்வே அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ள ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆற்றல்கள் கொண்ட ஜனாதிபதி, சமாதான முயற்சியினை உரிய முறையில் வழிநடத்துவது பிரச்சினையாக இருக்காது என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

## அரசியல் நெருக்கடிகள்...

அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசியலில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், உள்நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுப்பதற்காக தற்போது ஏற்பட்டுள்ள குழப்பநிலைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

இதற்கான நடவடிக்கை களை சம்பந்தப்பட்டவர்கள் முன்னெடுத்துச் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவார்கள் என நம்புவதாக அமெரிக்கத் தூதரகம் மேலும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## கொழும்புத்துறை...

என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் தனது கடமையை முடித்துவிட்டு, பிரதான வீதியை நோக்கி சென்று கொண்டிருந்தவேளை, வேகமாக வந்த ஹயஸ் வான் இவருடன் மோதியதில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் சிக்கிய இவர் சிறிது தூரம் இழுத்துச் செல்லப்பட்டு இறந்துள்ளார்.

இறந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, விசாரணையின் பின் நேற்று அவரது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

சம்பவத்தில் ஹயஸ் வானில் வந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச)

## தற்போதைய அரசியல் நெருக்கடிகளால்...

சாங்கத்துக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்பட்டு, பல நாட்டிலிருந்த யுத்த சூழ்நிலைக்கு முடிவுகட்டி, நாடு சமாதான சகவாழ்வுக்கு திரும்பிக்கொண்டிருந்து, சர்வதேச சமூகங்களின் முற்றுமுழுதான ஆதரவுடனும், அவர்களின் உதவியுடனும் சமாதானத்தை முன்னெடுக்க முடிந்ததுடன், பொருளாதார மீட்சிக்கும் உதவியது.

தற்போது ஜனாதிபதி திடீரென பாதுகாப்பு அமைச்சு, ஊடக அமைச்சு, உள்துறை அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து இந்த நிலைமை முற்றாக மாற்றப்பட்டு எதிர்மாறான சூழ்நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

விடுதலைப் புலிகளால் வடக்கு கிழக்குக்கான இடைக்கால நிர்வாக யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தது. அரசு நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக, அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைக்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டு வந்தது.

கடந்த ஒரு வருடத்திற்குமேலாக, உயிர்களைப் பலியிடாது காப்பாற்ற முடிந்தது. இப்பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் பங்கு கொண்டு பேச்சுவார்த்தைகளில கலந்துகொள்வது தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருந்தோம். இந்த நிலையில் ஜனாதிபதியின் நடவடிக்கையையிட்டு நாம் மிகவும் கவலையடைகின்றோம்.

ரணில் அரசின் கீழ் கட்டியெழுப்பப்பட்டு வந்த சமாதான நடவடிக்கை இச்சம்பவத்தால் அழிந்து விட்டது. நாம் அமைதிப் பேச்சுவார்த்தையைத் தொடர்வதற்கு மக்களது பேராதரவு உண்டு. எனினும், ஆட்சி ஒரு - பக்கம், அதிகாரம் இன்னொரு பக்கமாக இருக்கும் நிலையில் பேச்சுக்களை எமது அரசாங்கம் மேற்கொள்வது கடினம்.

ஜனாதிபதியால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுமெனில், அதற்கும் எமது கட்சியின் ஆதரவு உண்டு. அதற்கு ஜனாதிபதியின் உடன்பாடு இல்லையாயின், பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல ஜனாதிபதி ஆதரவு தருவது அவசியம்.

அண்மையில் இடம்பெற்ற சமாதானத்திற்கு குந்தகமான நடவடிக்கையால் சமாதானப் பேச்சுக்கள் பின்தங்கும் சூழ்நிலைக்கு உள்ளாகியுள்ளது.

விடுதலைப் புலிகளின் ஆறு கப்பல்களில் மூன்று மூழ்கடிக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய கப்பல்களில் வந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளிடம் சென்றுள்ளது என்றும்- பொய்யான தகவல்களை ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தி சமாதான ஸதிரத்தன்மையைத் தொடர்ந்து குழப்ப ஜனாதிபதி சந்திரிகா முற்படுகிறார்.

அரசாங்கம் தேக்க நிலையில் உள்ள பேச்சுக்களை இம்மாத முடிவில் ஆரம்பிக்கவிருந்தது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்காக பல விடயங்களை அரசாங்கம் தீர்மானிக்கவேண்டியுள்ளது.

மூன்று அமைச்சுக்களை சுவீகரித்துக் கொள்ளும் தீர்மானத்தில் மாற்றம் ஏற்படுத்தாவிட்டால் ஜனாதிபதி சமாதான முயற்சியின் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற, தீர்மானத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாம் சமாதானத்தில் உறுதியாக நிற்கின்றோம். சமாதானம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்கு எம்மால் ஆன எல்லா முயற்சிகளையும் செய்வோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வினாப்பத்திரங்கள் பெறலாம்
தரம் 4 முதல் O/L வரை
ஆண்டிறுதிப் பரீட்சை
வினாத்தாள்களை இன்று
பெற்றுக்கொள்ளலாம்
(சி-1790)
சயன்ஸ் அக்கடமி
நல்லூர்

## நாட்டு நிலைமை...

பிரதமருடன் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்களான கரு ஜெயசூரிய, மலிக் சமரவிக்கிரம ஆகிய இருவருக்கும் ஜனாதிபதி செயலகம் கடிதம் அனுப்பியுள்ளது.

இதேவேளை - பிரதமருடன் அவரது கட்சியின் சிறு குழுவினரையும் அழைத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இன்று முற்பகல் 11 மணிக்கும் மாலை 3 மணிக்கும், நாளை முற்பகல் 11.30 மணிக்கும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கும் தன்னைச் சந்திக்க முடியுமென இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று தினங்களில் வசதியான நாளொன்றினைத் தெரிவு செய்து தமக்கு அறிவிக்குமாறு, ஜனாதிபதி செயலகம் பிரதமரிடம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

யாழ் நகரில்
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்..!!!!!
1.பழுதடைந்த பழைய படங்களை நவீன முறையில் புதுப்பித்து மெருகூட்டல்
2.நெகட்டிவ் இல்லாமல் படத்தில் இருந்து படத்தைப் பிரதியாக்கம்செய்தல்
3.டிஜிட்டல் கமராவில் இருந்து எடுக்கப்படும் படங்களைப் பிரதியாக்கம் செய்தல்
4.அல்பத்திற்கான முகப்பு அட்டைப்படங்களைத் தயாரித்தல்
Vista Vision
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்,
52,பலாலி வீதி,யாழ்ப்பாணம்.
☎:021-2225187
ஆகிய சேவைகளை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி விஸ்தரித்துள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.